REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 29—2—48 | இதழ் 38

## காந்தியெனும் சாந்தஒளி

[செ. சின்னத்தம்பி.]

கனியிருப்பத் தன்மக்கள் காயுண்டு தான் வருந்த
மனங்குழைந்து தீங்கனியை மற்றவர்க்குத் தானருத்த
நனிவிரைந்த தந்தையார் நல்லுயிரைத் தான் குடித்த
புனிதமகன் மதமென்னும் பசுத்தோலிற் புலிபோலும்.

அடிகள்திரு உடலகத்தே அடிபட்ட குண்டுலகின்
அடிமுதலா உள்ளவுயிர் அனைத்தினையும் அறநெறியிற்
படிந்தோர்கள், அனைவரையும் படுத்திற்று, பதறிமனம்
ஒடிந்தார்கள், காந்தியெனும் ஒளிஇழந்தே மென்றார்கள்;

காந்தியெனும் சாந்தஒளி கருணையெனும் பேராற்றில்
நீந்திவிளையாடுகிற நேரத்தில், நீசனவன்
ஏந்திவரு குண்டிரட்ப இன்னுயிரைத் தானீந்தாய்,
சாந்தனையும் மாற்றார்க்கும் செந்தண்மை பூண்டொழுகும்

அந்தணனே! மன்பதைக்கோர் அறவோனே! இந்தியர்கள்
தந்தவமே! புத்தன்முதல் தரணிபுகழ் சான்றோர்கள்
தந்தருளும் நெறிமுறைகள் தன்பயனே! இந்துவினை
இந்துமதமே கொன்றதெனில் என்செய்யார் மதங்கொண்டார்!

மதமான பேய்பிடியா திருந்துபத மாண்பனைத்தும்
இதமாக எடுத்துரைத்துச் சத்தியான் னெறியொன்று
உதவுமுனை மதமான ஒருபேயே உண்டபினும்
மதமிங்கேன் மானிடர்க்கே; வாதிடவோ, சூதிடவோ.

# அந்த ஒருவகை நிலைமை!

—✲—

"மகாத்மா காந்தி போன்ற ஒரு சிரேஷ்டரை ஒருவன் எப்படிக் கொன்றான்? ஒரு வெறியனின் செயல் என்று அதைத் தள்ளி விடுவதற்கில்லை. **தேசத்திலுள்ள ஒருவகை நிலைமையே** அப்படிப்பட்டவனைச் சிருஷ்டி செய்தது. அந்த நிலைமைக்கு நாம் எந்த அளவுக்குப் பொறுப்பு என்பதைக்கவனித்துப் பார்க்கவேண்டும். உண்மையாகப் பார்க்கப் போனால், மகாத்மா மரணத்தில் முடிந்த இப்பாதகச் செயலில், ஒவ்வொருவரும் ஓரளவு பொறுப்பாளியாகவே இருந்திருக்கிறோம்."

என்று மௌலானா அபுல்கலாம் அசாத் அவர்கள், 22—2—48-ல் புதுடில்லியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். மௌலானா அவர்களின் இவ்வாசகத்தை, அவர் விளையாட்டாகக் கூறினார் என்றோ; பொறுப்பற்ற முறையில் பேசினார் என்றோ தள்ளிவிட முடியாது. காந்தியடிகளின் கொலைக்குக் காரணமாக இருந்தது எது என்பதனை இந்நாட்டு மக்கள் அனைவரும் உணர்ந்து, இனியேனும் அத்தகையகொடுமை நிகழும் முறையில், இந்நாட்டு நிலைமையை விட்டு வைக்கக் கூடாது என்பதே இவ்வாசகத்தின் பொருளாகும்.

காந்தியடிகள் போன்ற ஒரு உத்தமரை ஒருவன் எப்படிக் கொன்றான்? அவனுக்கும் அவருக்கும் யாதாயினும் பகை உண்டா? இல்லை.

என்ற போதிலும் கொன்றான்.

ஏன் கொன்றான்?

இதற்கு என்ன விடை?

"தேசத்திலுள்ள ஒருவகை நிலைமையே அப்படிப்பட்டவனைச் சிருஷ்டி செய்தது" என்பதுதான் இதற்கு விடை. என்ன அந்த ஒருவகை நிலைமை?

அதைத்தான் நாம் அனைவரும் எண்ணிப்பார்க்க வேண்டும்.

* * *

முத்தநாதன் என்பவன், தான் கொண்டுசென்ற கவுளியை எடுத்துப் புத்தகம் அவிழ்ப்பவன்போல நடித்து, கவுளியில் மறைத்து வைத்திருந்த உடைவாளினால் மெய்ப்பொருள் நாயனார் என்பவரைக் கொன்றான்.

கோட்சே, பிரார்த்தனைக்காகச் சென்று கொண்டிருந்த காந்தியடிகளை வணங்கி அவருடைய பாதம் பட்ட மண்ணை எடுப்பதுபோல் நடித்துக் குனிந்து, தன்னுடைய இடுப்பில் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியினால் உத்தமரைக் கொன்றான்.

அன்றைக்கும் இன்றைக்கும் இடையே ஏற்பட்டமாறுதல் என்ன?

அன்று உடைவாள்!

இன்று துப்பாக்கி!

இந்த மாறுதலைத் தவிர, நிலைமை அணுவளவும் மாறவில்லை. அன்று, பகைவர்களை வென்று நாட்டுக்கு நலம்பல செய்த மெய்ப்பொருள நாயனார் என்பவரை முத்தநாதன் என்ற கொடியவன் வஞ்சனையால் கொன்றான்.

இன்று, பலகாலமாக நம்மை ஆட்டி படைத்தஆங்கிலேயர்களைவெளியேற்றி, நாட்டில் ஒற்றுமையை உண்டாக்க உழைத்த உத்தமரைக் கோட்சே என்ற கொடியவன் கூசாது கொன்றான்.

அன்று, மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்றவன், சைவனாக நடித்து அவரைக் கொன்றான்.

இன்று, காந்தியடிகளைக் கொன்றவன், காந்திபக்தனாக நடித்து இவரைக் கொன்றான்.

நினைத்தாலே நெஞ்சு பதறும் இத்தகைய கொலைக்கொடுமைகள் நிகழ்வதற்கு அடிப்படைக் காரணமாக உள்ள நிலைமை என்ன என்பதனையே நாம் கவனித்துப் பார்க்கவேண்டும்.

தேசத்தின் ஒருவகை நிலைமையே இதற்குக் காரணம் என்று அபுல்கலாம் அவர்கள் கூறியுள்ளார். என்ன அந்த ஒரு வகை நிலைமை?

பன்னெடுங் காலமாகவே, நம் நாட்டு நிலைமை, எல்லாத்துறைகளிலும் மதக்கோட்பாடுகளையே அடிப்படையாகக் கொண்டுவந்திருக்கிறது. மக்களின் வாழ்க்கை முறைகளின் ஒவ்வொரு பகுதியும் மத அடிப்படையின் மீதே அமைக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் சிறிது அசைவு அல்லது மாற்றம் நேரும்போதெல்லாம், நாட்டில் குழப்பமும், பூசலும், கொடுமையும் உண்டாகின்றன. அதிலும் நம் நாட்டில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல திறப்பட்ட மதங்கள் இருப்பதால், ஒன்றையொன்று மாய்க்கும் பணியே அன்றுமுதல் இன்றுவரை நடைபெறக் காண்கின்றோம்.

தவிர்க்க முடியாத பலதிறப்பட்ட மதங்களைக் கொண்ட இந்நாட்டு மக்களிடையே பதிந்துள்ளபிளவு மனப்பான்மையையும், அதனால் ஏற்படும் கொடுமைகளையும் ஒழிக்கவேண்டுமென்பதே காந்தியடிகளின் அடிப்படை நோக்கமாக இருந்தது. பண்டைகால மதத்தலைவர்களைப்போல, ஒரு மதத்தை அழிப்பதன் வாயிலாக இன்னொரு மதத்துக்கு ஆக்கந் தேடும் இழிந்த நோக்கத்தைக் காந்தியடிகள் கொள்ளவில்லை. "எம்மதமும் சம்மதம்; மதத்தின் பெயர்கூறி, மக்களிடையே உயர்வுதாழ்வு மனப்பான்மையைக் கற்பித்தல் கூடாது; இந்துவாயினும், முஸ்லீமாயினும் இந்நாட்டு மக்களே; குரானும் கீதையும் ஒன்றே; இராமனும், ரகீமும் பெயரளவில் வேறாயினும் கடவுள் தன்மையில் ஒன்றே" என்று தான் காந்தியடிகள் கூறினார் — கொலை செய்யப்பட்டார். இந்தக்கொலை, எதனை அடிப்படையாகக் கொண்டதென்பதனை உணர்ந்துதான் அபுல்கலாம் அசாத் அவர்கள், தேசத்திலுள்ள ஒருவகை நிலைமையே இக்கொலைக்குக் காரணம் என்று கூறுகின்றார்.

ஒரு நாட்டு மக்களின் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட ஒரு உத்தமரைக் கொலை செய்யக்கூடிய ஒருவனைச் சிருஷ்டிக்கும் அளவுக்கு இத்தேசத்தின் நிலைமைகெட்டுக்கிடக்கிறதென்றால், இதனைவிடக் கேவலம் ஒரு நாட்டுக்கு வேறு என்ன இருக்கமுடியும்? இந்நிலைமை மாறவேண்டாமா? இது தனிப்பட்ட ஒருவர் இருவரால் செய்யக்கூடிய காரியமா? "உண்மையாகப் பார்க்கப் போனால், மகாத்மா

(15-ம் பக்கம் பார்க்க)

புதியதொடர் கதை

கற்பனைச் சித்திரம்



22—2—48 தொடர்ச்சி

கம்பவுண்டருக்கு, எங்கே வேறு யாராவது வைத்தியத்துக்கு வந்து விடுகிறார்களோ, வேறுயாரேனும் இந்தச் சீனைக்கண்டால் என்ன எண்ணுவார்களோ என்ற பயம். டாக்டரின் பெயர் கெடக்கூடாது என்பதிலே கம்பவுண்டருக்கு நிரம்பக் கவலை. டாக்டர் கலியாணமாகாத இளம் பிள்ளை; கண்மண்தெரியாது ஆட ஆரம்பித்து விட்டால், பிறகுபிழைப்பின் வாயில் மண்தான் என்பது கண்ணுசாமியின் எண்ணம். டாக்டரின் தாயாரும் அடிக்கடி கண்ணுசாமிக்கு, "உன் தம்பியைப் போல டாக்டரைப்பார்த்துக்கொள்; அவன் ஒன்றும் தெரியாதவன். வெள்ளை மனுஷன். அவனுடைய அப்பாவும் அப்படித்தான், சின்ன வயதிலேயே அவனுடைய அப்பா கொஞ்சம் கெட்டு அலைஞ்சவர். பிள்ளையாண்டான் நல்லவேளையாக அப்படி எல்லாம் இல்லை, தானுண்டு தன்வேலையுண்டு என்று இருப்பவன். ஆனால் கலியாணமாகவில்லையே இன்னும். கண்ணும் கருத்தும் அலைகிறபருவம். காலமோ முன்னைப்போல இல்லை. கண்டகண்ட சிறுக்கிகளோடு எத்தனையோபேர் காலங்கள்ளி வருவதைக் கண்ணாலே பார்க்கிறோம். நமது பையன் அப்படிப்பட்டவனல்ல. எந்தப்பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்கமாட்டான். இருந்தாலும் நீயும் கொஞ்சம் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்" என்று கூறுவதுண்டு. ஆகவே கண்ணுசாமி, கம்பவுண்டர் வேலையுடன் காரியஸ்தன் வேலையும் தனக்குஉண்டு என்று எண்ணிக் கொண்டிருந்தான். தாசியுடன் டாக்டர் பேசப்பேச, கம்பவுண்டருக்குக் கோபம் வந்ததில் ஆச்சரியமில்லையல்லவா! இவள் யாரடா சனியன்! சிவபூசையில் கரடிபுகுந்தது போல வந்து சேர்ந்தாள். ஏதேதோ பேசுகிறாள். வெட்கமே சானோம்.

நம்ம டாக்டர் மருந்து வகைகளை அறிவாரே தவிர மனித சுபாவம் என்ன தெரியும் அவருக்கு. அதிலும் பெண்கள் விஷயம் என்ன தெரியும். பெண்களிலும் இத் தாசிகள் சங்கதி என்ன தெரியும்" என்று எண்ணினன். விமலா வெளியேபோனபிறகு, தானே டாக்டருக்கு புத்திமதி கூறவேண்டும் எனத் தீர்மானித்தான். அதே சமயத்தில், விமலா, டாக்டரிடம் விடைபெற்றுக்கொள்ள ஆரம்பித்தாள். டாக்டர் "எப்போது வீட்டுக்கு வருகிறாய் சொல்லு. உன் கதையை நான் எப்போதுகேட்பது" என்றார். "பழைய பல்லவியைவிடமாட்டீர்களா?" என்று விமலா கேட்டாள். "எப்படி விடுவேன்" என்றார் டாக்டர்.

"டாக்டர் சார், நான் உங்கள் வீட்டுக்கு வருவதைவிட........" என்று விமலா இழுத்தாள். "ஏன், நானே உன் வீட்டுக்கு வருகிறேன். விலாசம் என்ன?" என்று சுந்தரேசன் கேட்டார். "ஏதேது காரியம் முற்றிவிட்டது. சிறுக்கி, சிரித்துக் குலுக்கிப் பேசி, டாக்டரை மயக்கிவிட்டாளே. என்னசெய்வது" என்று கண்ணுசாமி யோசித்தான்.

"சொல்லு விமலா. நான் எப்போது வந்தால் நீ ஓய்வாக இருப்பாய்" என்று டாக்டர் கேட்டார்.

"ஓய்வா! எப்போதுந்தான் ஓய்வு! ஆனால் நீங்கள் வருவது அவ்வளவு நன்றாக இருக்குமா! ஊரார் ஏதாவது தவறாக........" என்று விமலா கூறினள். "ஊராருக்கு நமது விஷயத்தைப்பற்றி என்ன கவலை? நான் ஊராரைக் கேட்கிறேனு, நீ ஏன் இதைச் செய்தாய், அதைச் செய்தாய் என்று. நான் வருவதால் உனக்கு ஏதாவது தடையாயிருக்குமா? அதைக்கூறு. வேறு சாக்கு வேண்டாம்" என்று டாக்டர் கண்டிப்பாகப் பேசினர். "சரி, நாளை மாலை 6-மணிக்கு வாருங்கள். மருந்தும் கையோடு எடுத்துக்கொண்டு வந்துவிடுங்கள்" என்றாள் விமலா. "சார்! மணிபர்சை இங்கேபோட்டு விட்டீர்களே, இதோ எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிக் கொண்டே, டாக்டர் கீழே தவறி விட்ட மணிபர்சை, கண்ணுசாமி டாக்டரிடம் தந்தான். தரும்போதே விமலாவை முறைத்தான். விமலாவுக்கு கண்ணுசாமியின் குறும்பு தெரிந்துவிட்டது. பணத்தைப் பிடுங்கிக் கொள்வாள் என்றும் காசாசைபிடித்தவள் தாசியென்றும்,

(அடுத்த பக்கம் பார்க்க)


# முத்தமிழ் நிலையம்

## புதிய வெளியீடுகள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. தமிழர் யார்? | 0 | 8 |
| 2. ஆரியர்—தமிழர் கலப்பு | 0 | 8 |
| 3. தமிழ்: பழமையும் புதுமையும் | 0 | 8 |
| 4. தமிழர் சமயம் எது? | 0 | 8 |
| 5. மரணத்தின் பின்? | 0 | 8 |
| 6. பெண்ணே பெரியவள், ஏன்? | 0 | 8 |
| 7. சிந்துவெளித் தமிழர் | 0 | 8 |
| 8. ஆரிய வேதங்கள் | 0 | 10 |
| 9. பாம்பு வணக்கம் | | |
| 10. தமிழ் ஆராய்ச்சி | 0 | 6 |
| 11. சமணமும் சைவமும் | 0 | 8 |
| 12. உலகக்கலை உயர்வுக்கு உதவியவர் யார்? | 0 | 8 |
| 13. ஏ, தாழ்ந்த தமிழகமே (C. N. அண்ணுத்துரை, M. A.,) | 0 | 6 |
| 14. பெண்கள் உலகம் அன்றும் இன்றும் | 0 | 12 |
| 15. நடன சுந்தரி | 1 | 0 |
| 16. குமுதம் | 1 | 0 |
| 17. நாடகக்கலை மலர் (226 பக்கம்) | 2 | 0 |
| 18. இந்து மதம் தமிழர் மதமா (ஈழத்து அடிகள்) | 0 | 8 |

முத்தமிழ் நிலையம்,
75, வாதாமுத்தியப்பன்தெரு, சென்னை.

கண்ணுசாமி டாக்டரிடம் கூறாமல் கூறவே, மருந்து எடுத்துக்கொண்டு வந்துவிடுங்கள் என்று தான் கூறிய உடனே மணிபர்ஸ் என்ற பேச்சைப் பேசினான் என்பதைத் தெரிந்து கொண்டாள். கண்ணுசாமியின் குறும்பைப் போல எத்தனையோ குறும்புகளைக் கண்டவள் விமலா. அவளிருந்துவந்த உலகம், ஒரு தனிச் சர்வகலாசாலை. கண்ணுசாமி அதன் அரிச்சுவடிமட்டுமே அறிவான்.

விமலா மெள்ளச் சிரித்துக் கொண்டே, "டாக்டர் சார், எதெதை எங்கெங்கே வைத்து வைக்கவேண்டும் என்பதே உமக்குத் தெரியவில்லையே" என்று கூறினாள். கண்ணுசாமிக்கு கோபம் மூண்டுவிட்டது. "யாரைச்சாக்கிட்டு இதைச்சொன்னாய்" என்று விமலாவை நோக்கிக்கேட்க, விமலா சிரிப்பை அடக்கிக்கொண்டு பயந்த பாவனையுடன் "கம்பவுண்டர் என்ன சொல்கிறார்; எனக்குத் தெரியவில்லையே; மணிபர்சை ஜேபியில் வைக்காது டாக்டர் வேறு எங்கேயோ போட்டுவிட்டாரே என்று, எதெதை எங்கெங்கு வைக்கவேண்டுமோ அங்கங்கே வைக்கவேண்டுமென்று சொன்னேன். இவருக்கு ஏன் டாக்டர், கோபம் வருகிறது" என்று டாக்டரைக்கேட்டாள். கண்ணுசாமிசரேலென, உள் அறைக்குச் சென்றுவிட்டான். விமலா சிரித்துக்கொண்டே "நான் போய்விடுகிறேன் டாக்டர். என்விலாசம் உங்கள் கம்பவுண்டருக்கே தெரியும். நான் அவர் தங்கை வீட்டில்தான் குடியிருக்கிறேன்" என்றாள். உள்ளே சென்ற கண்ணுசாமி ஓடிவந்தான் வெளியே. "சீ! நாயே! போ வெளியே! என் தங்கை வீடாம். அவள்யாரடி என்தங்கை!" என்று கூவினான். "ஏன் உங்க மரகதம் வீட்டில்தானே நான் இருக்கிறேன்; உன் தங்கைதானே மரகதம்! அவள் சொல்லித்தான் நான் இங்கு வந்தேன்." என்றாள் விமலா. 'டாக்டர்சார், நான்வேலையைவிட்டுப்போய் விடட்டுமா, இந்த விதண்டாவாதக் காரியைவெளியேதுரத்துகிறீர்களா? இரண்டிலொன்று சொல்லுங்கள் சீக்கிரம். இவள் வேண்டுமென்றே என்னைக் கேவலப்படுத்துகிறாள்" என்று கண்ணுசாமி கண்கலக்கத்தோடு கூறினான். டாக்டருக்கு ஒன்றுமே புரியவில்லை. மரகதம் யார்? அவள்வீட்டில் தாசி விமலா எப்படிக் குடியிருக்கமுடியும்? கண்ணுசாமி நல்ல குலமாயிற்றே? என்று யோசித்தார். விமலாவின் கூரிய பார்வை, டாக்டர் சுந்தரேசனின் மனதிற்குள் உள்ளதைக் கண்டுபிடித்துவிட்டது. டாக்டரே என் கதையைக் கேட்க வேண்டுமென்று ஆவல் கொண்டவர்களே, அதைவிட ருசிகரமானகதை, உங்கள் கம்பவுண்டர் தங்கை மரகதத்துடையது. இங்கே கூறினால் கண்ணுசாமிக்குக் கோபம் கொதித்துக்கொண்டுவரும். அது சகஜம். மரகதம், கண்ணுசாமியின் தங்கை, ஆனால் வெளியே வந்துவிட்டவள்" என்றாள். "வெளியே வந்துவிட்டவளா!" என்றார் டாக்டர்.

"ஆமாம்! வெளியே வந்துவிட்டவளென்றால், என்னைப்போலத் தாசியாகப்பிறந்தவளல்ல. விதியின் வசத்தால் விபசாரி ஆனவள். நாளைக்கு அவள் கதையைக் கூறுகிறேன் வாருங்கள்" என்று கூறிவிட்டு, வெளியே போய்விட்டாள்.

தாசி விமலாவின் சாதுர்யம் டாக்டருக்குச் சந்தோஷத்தை மட்டுமே தந்தது. ஆனால் கம்பவுண்டர் கண்ணுசாமியின் தங்கை விஷயமாக, விமலா கூறினதைக் கேட்டு, அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. கண்ணுசாமி எவ்வளவு நல்ல மனுஷன். அவனுக்கு இப்படி ஒரு தங்கை இருக்கவேண்டுமா? என்று எண்ணினார். கண்ணுசாமியின் கோபமும் கலக்கமும், சுந்தரேசனுக்குக் கவலையை உண்டாக்கிவிட்டது. அவனுடைய மனம் சாந்தி அடையவேண்டும் என்பதற்காக, விமலாவின் வரலாறும் வேண்டாம், மரகதத்தின் கதையும் வேண்டாம், அவர்கள் தொடர்பே வேண்டாம் என்றுகூட எண்ணினார். ஆனாலும் நல்ல புத்தி சாதுரியமுள்ள விமலாவுக்கு ஒரு ரௌடி எப்படி நாயகனானான், நற்குடியிற் பிறந்த மரகதம் எப்படிப் பொதுமகள் ஆனாள் என்ற கதையைக் கேட்டே தீரவேண்டுமென்ற ஆவல், சுந்தரேசனை விட்டு அகலவில்லை. மேலும் விமலாவிடம் ஏதோ ஒருவித பாசம் அவனுக்கு ஏற்பட்டது.

மறுநாள் மாலை குறிப்பிட்டபடி டாக்டர் சுந்தரேசன் விமலாவைக் காணச் சென்றான். கையில் கவனமாக மருந்தும் கொண்டுபோனான். மருந்து பாட்டில், அவன்மீது ஊராரின் தூற்றல் பாணம் பாயவொட்டாது தடுக்கும் கவசமாக இருந்தது. டாக்டர் மருந்து கொடுக்கச் செல்கிறார் என்ற சாக்குக்கு அது பெரிதும் உதவுகிறதல்லவா. சுந்தரேசனுக்குக், கதையைக் கேட்க வேண்டுமென்ற ஆவல் எவ்வளவு இருந்ததோ அந்த அளவுக்கு மேலேயே பயமும் இருந்தது. ரௌடி ரங்கன் அங்கு இருந்து ஏதாவது வெறியில் உளறினால் என்ன செய்வது என்ற கவலை. ஜுரத்துக்கு மருந்தும், புண்ணுக்குப் பூச்சும் போடத் தெரியுமே யொழிய, குடியனின் கோணல்சேட்டையைத் தவிர்த்துக்கொள்ள டாக்டருக்கு என்ன தெரியும் பாபம்! நல்ல வேளையாக ரங்கன் அங்கு இல்லை. உள்ளே நுழையும்போதே மலர்ந்த முகத்துடன் விமலா டாக்டரை வரவேற்றாள். பல வருஷங்களாகப் பழகியவள் போலப் பேசி உபசரித்தாள். வைத்தியசாலையில் இருந்தபோது அவள் காட்டிய சாமர்த்தியத்தைவிட வீட்டில் அவள் சமர்த்து டாக்டருக்கு அபாரமாகத் தோன்றிற்று.

சற்று ஸ்தூலசரீரமுடையவளும், சிவந்த மேனியினளும் நல்ல ஆபரணங்கள் அணிந்தவளுமான மாது தன்னை நமஸ்கரித்து "நாங்கள் செய்த பூஜாபலன்தான், இப்படிப்பட்ட பெரிய மனிதர்களை எல்லாம் இங்கே வரச் செய்தது" என்று உபசாரம் கூறியதைக் கண்ட சுந்தரேசன், விமலா குறிப்பிட்ட மரகதம், இவளாகத்தான் இருக்கவேண்டும் என எண்ணி, தன் எண்ணம் சரியா என்று கேட்பதுபோல விமலாவைப் பார்த்தான். "இது தான் மரகதக்கா. நேற்று சொன்னேனே" என்று சிரித்துக் கொண்டே விமலா கூறினாள். அவள் மனக்கண் முன், கண்ணுசாமி கோபத்துடன் கூச்சலிட்ட காட்சி தோன்றிற்று "அக்கா, அவருக்கு எவ்வளவு கோபம் வந்தது தெரியுமா? நாயே பேயே, போடி வெளியே என்று வாயில் வந்தபடி கூறினார். நான்ஒன்றும் பதிலே பேசவில்லை" என்று விமலா மரகதத்திடம் கூறினாள். மரகதம் "கோபத்துக்கென்ன குறைச்சலம்மா. கோபம் வரத்தான்வரும். ஏனென்றால் என்னை ஏழடுக்கு உப்பரிகை மீது ஏற்றிவைத்தான், நான் கெட்டுவிட்டேன்; அதுதான் அவன் நினைப்பு. பேசுவான் இப்போது பெரியஆசாமி போல. வாய்க்குப் பூட்டா சாவியா

(13-ம் பக்கம் பார்க்க)

# பறந்த அனுபவம்!

: (C) :

நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன் நடிக்கும் பைத்யக்காரன் படத்திலே, பறந்த அனுபவம் என்பவரைக் கண்டீர்கள்.

இது, பறந்த அனுபவம்! விண்ணிலே! விமான மூலம்! யார்? நீங்களும் நானுமல்ல! அமைச்சர்களல்ல! துரைத்தன அலுவலர்களல்ல! இப்படிப்பட்ட சாமான்யர்கள் பறந்த அனுபவத்தைத், ஒரு பிரமாதமானதாகக் கூறமுடியுமா—கூறத்தகுமா? பட்டாளத்துக்காரர் போலும் என்று எண்ணுகிறீர்கள்—அல்லவா? அவர்களையும் தள்ளுங்கள்—இவர் அவர்களை எல்லாம்விட, மேலானவர், உயர்ந்தவர்.

* * *

தரைமட்டத்திலிருந்து 5000 அடி மேலே, விமானம் பறக்கிறது. அவருடைய, கண்கள், விமானப்பலகணிவழியாகக் கீழே செலுத்தப்படுகின்றன. நகரங்கள், சிறுவர்களின் விளையாட்டுச் சாமான்களபோலத் தெரிகின்றன! ஆறுகள், மல்லிகை மாலைகள் போல காட்சி அளிக்கின்றன. மலைகள், மணமேடுகளம்போலுள்ளன! வயல்கள், சதுர பில்லை ஓடுகள் போல. பாதைகள், கீறல் கோடுகள் போல!

விமானம் செல்கிறது அவரைச் சுமந்து கொண்டு, அவரோ, சகல ஜீவராசிகளையும் ரட்சித்து, அவர்களைச் சன்மார்க்கத்தில ஈடுபடச் செய்யும், பெரிய பொறுப்பைச் சுமந்து கொண்டிருக்கிறார்—வேதம், வேதாந்தம், புராணம், இதிகாசம், நீதிநூல்கள், வேறுபல நிகண்டுகள், ஆகியவற்றிலே உள்ள கருத்துக்களைச் சுமந்துகொண்டு செல்கிறார். இப்படிப்பட்ட மகத்தான "சுமைதாங்கியை"ச் சுமந்து கொண்டு செல்லும் விமானமோ, கர்மவினைகளைக் கலைத்துக் கொண்டு செல்லும் ஞான சக்கரம்போல, சுற்றியுள்ள மேகங்களுக்குள்ளே புகுந்து, வெளியேறி, மேகத்தைச் சிதறடித்துக் கொண்டு செல்கிறது. பலகணி வழியாகப் பார்க்கிறார்—விமானத்தைச் சுற்றிலும், மேகங்கள்—பொதியிலிருந்து எடுத்து, சிதறவிடப்பட்ட பஞ்சுத்துண்டுகள்போல! ஞானரதம் ஏறி, கர்ம வினைகளைக் கடந்து, பகவத் பிரசாதம் பெற, சன்மார்க்க நெறியிலே, செல்வதே மாந்தர் கடன்—இது அவருடைய, உபதேசம், பலமுறை செய்திருக்கிறார்.

* * *

மனை, மனைவி, மாடு கன்று, பணம், எனும் இவைகள், மிகமிகப் பிரமாதமானவைகள் போலத் தோன்றும்—ஆனால் ஞானரதம் ஏறி, எண்ணங்களை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்று, பார்த்தால், அவையாவும், கேவலம் அற்ப வஸ்துக்கள் கூட அல்ல—வெறும் மாயை என்று தெரியும், என்பதை அவர் எத்தனையோ இடங்களில் கூறியிருக்கிறார்—அன்றுதான் குன்றுகள், கால்பந்தளவும், ஆறுகள் மாலைகளளவும், பாதைகள் கோடுகளளவும், தெரிவதைக் கண்டார். ஞானமார்க்கத்திலே பறந்த அனுபவத்தைப் பெற்றவர், அன்று பறந்த அனுபவம் பெற்றபோது, நான் எண்ணுகிறேன், உண்மையில் வெட்கப்பட்டிருக்கவேண்டும்.

* * *

குருவே உமக்கு ஒரு இலட்சம் சுலோகங்கள் தெரியுமே—தத்துவார்த்தங்களை மாதக்கணக்கிலே கூற வல்லவராயிற்றே—ஒரு சுலோகமாவது, உமக்கு, இந்தப் பறந்த அனுபவத்தைக் கொடுத்ததுண்டா?—என்று, காற்றுக் கூடக் கேட்டிருக்கும்.

* * *

இப்போது நாம் 6000 அடி உயரத்தில் சென்று கொண்டிருக்கிறோம்.

இடம், பெஜவாடா சமீபம், சென்னைக்கு இன்னும் இரண்டு மணி நேரத்தில் போய்ச்சேருவோம்.

* * *

ஒரு மாது தருகிறாள் இந்த வாசகங்கள் பொறிக்கப்பட்ட, காகிதத்தை — புன்னகையுடன். கேட்கிறாள் கனிவுடன், "மயக்கம் இல்லையே! ஏதாவது பானம் தேவையா? சாய்ந்து கொள்கிறீர்களா? படிக்க ஏதாவது புத்தகம் வேண்டுமா?"—என்றெல்லாம்.

அவளோ, சாமான்யப் பெண்—சாஸ்திர விற்பனரைக் கேட்கிறாள், மயக்கமாக இருக்கிறதா என்று—வானவீதியில் — நிலமட்டத்துக்கு 6000 அடிமேலே! அவர் என்ன எண்ணியிருப்பார்! பாவம்! அவரைப் பற்றி அந்தப்பெண்தான் என்ன எண்ணியிருக்கும்.

அவருடைய அருள் மொழியைக் கேட்க, ஆயிரமாயிரம் பக்தர்கள் கூடுவர்.

அவருக்குப் பாத காணிக்கை செலுத்துவர்.

அவருடைய மனம், சாஸ்திர சாகரம்!

அவர், திருவாய் மலர்ந்தால், பாவம் அகலும், பரமனின் அருள் வந்து சேரும்.

அவர், நானே கடவுள் என்று தத்துவம் கூறுபவர்.

சகல பதார்த்தங்களும், உருவிலும் சரி, குணத்திலும் சரி கேவலம் மனம் உண்டாக்கும் மாயாஜாலங்களேயன்றி, நிஜமல்ல—என்று கூறுபவர்.

அவருடைய ஆதிக்கம், அரச மன்றங்களிலேகூடப் புகமுடியும்.

மேலானகுலம்! உயர்ந்த பதவி! உத்தமகுணம்! ஊராளும் பேர்வழிகளும், அவருடைய வார்த்தைக்குக் கட்டுப்படக்கூடும்!

* * *

சாக்லட் வேண்டுமா? பானம் வேண்டுமா? — என்று அன்புடன் கேட்கும் ஆரணங்கிடம், இப்படிஎல்லாம் கூறலாம், அவரைப்பற்றி.

* * *

அவரும் மௌனம், ஆரணங்கும் மௌனம்! ஆனால் இருவரும் பார்த்துக்கொள்கின்றனர்.

பெண்பாவாய்! நீ என்னைக் கேலி செய்கிறாய் அல்லவா?

உம்மை யார்? நீர்தான், உத்தமராம் குருவாய்!

ஆமாம் — அதனால்தான் நீ கேலி செய்கிறாய்?

இல்லையே! நீர் சகல கலாவல்லவராய்!

ஆமாம் — அதை எல்லாம் கூறிவிட்டு, இவ்வளவு தெரிந்த உமக்கு, இவ்வளவையும் உமக்குத்தெரிவித்த நூற்களை இயற்றின உம்முன்னோர்களுக்கு, இதுபோல் பறந்த அனுபவத்தைக் கேவலம் பரங்கிகள் அல்லவா தருகின்றனர், என்று கேட்டுக் கேலி செய்கிறாய்.

* * *

பேசவில்லை — ஆனால் பார்வையிலே, இந்தப் பேச்சும் இதற்கு மேலும் இல்லாமற் போகவில்லை.

கண்களைமூடிக்கொள்கிறார். புதிதானவே மயக்கம் என்று அணங்கு எண்ணிக்கொள்கிறாள். தவறு. குரு, ஏதோ ஞானவிசாரத்தில் ஈடுபட்டுவிட்டார் — மற்றவர்கள் எண்ணுகிறார்கள். அதுவும் தவறு. அவர் கண்களை மூடிக்கொண்டது, வெட்கத்தால்!!

* * *

இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம், பதினெண்புராணம், வேதாந்தம்—சகலமும் அறிந்திருக்கிறோம்—சருகுகள் உதிரும்போது பறந்து செல்வதை, பட்சிகள் சிறகடித்துச் செல்வதைத்தான் கண்டிருக்கிறோம் — பல்லக்கைச் சுமந்து கொண்டு, பாபத்தைத்துடைத்திடும் மகாசக்தி வாய்ந்த குருமார்களைச் சுமந்துகொண்டு, மேகங்களைத்துளைத்துக்கொண்டு செல்லும், கருவியைப் பற்றிய குறிப்பு கற்கிறோமில்லை. உலகினிடம் உரத்தகுரலில் பேசியும்வருகிறோம், நமது புராதன சாஸ்திரங்களிலே சகலஞானமும் உண்டு, என்று. நாட்டுமக்கள் ஞானமற்றவர் என்று ஏசியுமிருக்கிறோம். அப்படிப்பட்ட நாம், இன்று, நமது பரமபுருஷர்கள் கனவும் கண்டிருக்கமுடியாத கருவியை, வானவீதியில், வாயு, இந்திரன், எனும் தேவர்களின் வரம பெற்று அல்ல, விஞ்ஞானத்தின் துணைகொண்டு, செலுத்தும், மற்ற நாட்டாரைக் காண்கிறோம் — அவர்களின் தயவைப் பெற்றுக்கொள்கிறோம் — இதோ வானவீதியில் சஞ்சரிக்கிறோம் — நமக்குப் பெயரோ பிரமாதம், உயர்வோ தலைமுறை தலைமுறையாகத் தரப்பட்டுவருகிறது— நாமோ, 'பறந்த அனுபவம்' பெறுவது, நாம் கற்ற, ஞானத்தின் துணைகொண்டல்ல, வேறு நாட்டவரின் விஞ்ஞான அறிவினால்.

இதை எண்ணும்போதே வெட்கமாக இருக்கிறதே! இந்தக்கருவியைப் பார்க்கும்போது, அதைவிட வெட்கமாக இருக்கிறது. இந்தப்பெண்ணைப் பார்த்தாலோ, மிக மிக வெட்கமாக இருக்கிறது!

* * *

இவ்விதம் எண்ணியே அவர் கண்களை மூடிக்கொண்டார். நவ நாகரீகம் ஒரு பைசாசம்—அவர் கூறப்போகிறார்—கூறியிருக்கிறார்:

வேங்கைக்கு புள்ளிமானின் கன்று, தேனில் தோய்த்தபழத்தைக் கொடுக்கிறது, என்று கதையுமில்லை.

மாடப்புறுவிடம் தினை பெற்றுத் தின்று வேடன் உயிர் வாழ்கிறான் என்று கவிதை இல்லை.

காக்காய் வலிப்பெடுத்துக் கீழே வீழ்ந்த வைத்யனுக்கு, நோயாளி உதவி செய்வதுபோல, படம் எழுதி வைக்கவில்லை. நம்பமாட்டார்கள்—கேலி செய்வார்கள் என்ற எண்ணத்தால்.

ஆனால், ஜகத் குரு சங்கராச்சாரியார், ஜனவரி மாதம் 24ந்தேதி நாகபுரியிலிருந்து சென்னை வந்து சேர்ந்தார், விமான மூலம்!—என்பது, கற்பனைச் செய்தி அல்ல— இந்து பத்திரிகையில் பிரசுரமாகி உள்ள செய்தி!

பறந்த அனுபவம், சங்கராச்சாரியாருக்கு. சாஸ்திரச் சுமை தாங்கியைச் சுமந்து வந்த ருசிகரமான அனுபவம் விமானத்துக்கு!! நவநாகரீக வைரி, உலகமாயையை உணர்ந்த உத்தமர், இலட்சக் கணக்கான மக்களின் ரட்சகர், குரு, அவருடைய பாட்டன் முப்பாட்டன் காலத்திலேயும், அவதார புருஷர்கள் காலத்திலேயும் கண்டறியாத மேனாட்டு விஞ்ஞானக் கருவியின் துணையை நாடும், வெட்கங்கெட்ட நிலையைக் கண்ட அனுபவம் விமான விருந்தாளிக்கு!

குருஜி! சென்னைக்குச் செல்ல விமானம் ஏற்பாடு செய்கிறோம்—என்று சொன்னபோது, இந்தச் சங்கராச்சாரி சொல்லியிருக்க வேண்டாமா 'சீடர்காள்! நானோ உபதேசம் செய்யச் செல்கிறேன். நமது பாரத வர்ஷத்தின் பூர்வ பெருமைகளை, நமது ஞான மார்க்கத்தின் சிறப்புகளை, அகில உலகும் அந்தகாரத்தில் சிக்கியிருக்கும் வேளையில் பாரத பூமியிலிருந்து கிளம்பும்ஞான ஒளியே இருளைத் துடைக்கும் என்பது பற்றி எல்லாம் பேசுவதற்குத்தான் செல்கிறேன். நவ நாகரீகத்தை நாசக் கருவி என்று கூறப் போகிறேன். மேனாட்டார், ஆத்மார்த்தத்தை இழந்து விட்டவர்கள்—பாவிகள்—என்று பலமாகக் கண்டிக்கப் போகிறேன்—அப்படிப்பட்ட சத்காரியத்துக்கு (!?)ச் செல்லும் நான், விமானத்தில் செல்வதுசரியா, நாலுபேர் கேள்விப்பட்டால் கேலி செய்யமாட்டார்களா—செச்சே! வேண்டாம் விமானம்!"—என்றல்லவா கூறிவிட வேண்டும்.

நியாயப்படி, அவருடைய பரந்த அனுபவத்தின்படி அவர் நடந்து கொள்ள வேண்டுமானால், இந்த பறந்த அனுபவம் பெற இணங்கலாமா?

அன்புடன் அளித்த அறுசுவை உண்டியை, அக மகிழ்ச்சியுடன் உண்டான பிறகு, ஆயாசம் தீர, பஞ்சணையில் படுத்துக் கொண்டு, விருந்தளித்தோன் பாதத்தைவருடும் போது, அவனை, அருகே அழைத்து அவன் முகத்திலே காரிஉமிழ்ந்தால், உமிழ்பவனை என்ன செய்வது? செயல் கூட வேண்டாம்—அப்படிப்பட்டவனைக் கண்டிக்க என்ன சொல்லை உபயோகிப்பது!—சற்று யோசித்துப் பாருங்கள்—ஒருபத்து, நல்ல அகராதியின் துணையையும் நாடிப் பாருங்கள்.

அந்த ஆசாமியின் போக்குக்கும், இந்த பூரிசங்கராச்சாரியாரின் போக்குக்கும் என்ன வித்தியாசம்! மேனாட்டு அறிவின் வளர்ச்சி விஞ்ஞானம்—விஞ்ஞானத்தின் விளைவு விமானம்—அதிலே ஏறி வருகிறார் இவர்—எதற்கு?—மேனாட்டு அறிவு முறை, விஞ்ஞானம், ஆகியவற்றைக் கண்டிக்க! சரியா? நியாயமா? பொருத்தமா? நீங்கள் இந்தப் போக்கைச் சகித்துக்கொள்கிறீர்களா? இதைவிட மாபெரும் துரோகம் ஏதேனும் உண்டா?—எண்ணிப் பாருங்கள், இது எவ்வளவு வேதனை தரும் வேடிக்கை என்று.

பறந்த அனுபவத்துக்குப் பிறகாவது பழைய பேச்சை விட்டு விடுவாரா? அதுதானே கிடையாது! பிரமாதமாகப் பண்டைப் பெருமை, பூர்வகாலம், ஆதிநாள் நாகரிகம், என்றெல்லாம் பேசி, பழமையை ஆதரித்துப் பிரசாரம் செய்யும் இந்தச் சங்கராச்சாரியார், தமது ஞான விசேஷத்தால், நாகபுரியிலிருந்து கிளம்பி, "ககன மார்க்கமாக"ப் பயணம் செய்து சென்னை வரவில்லை, வெள்ளையர் கண்டுபிடித்த விமான மூலம் தான் வந்தார்—அப்படிப்பட்டவரிடம் 'மகிமை'யும் இராது நியாயமும் கிடைக்காது—எந்த நவ நாகரீகத்தை அவர் கண்டிக்கிறாரோ, அதே நவ நாகரீக வசதியான விமானத்தை அவர் வெறுத்துத் தள்ளிவிட்டு, காடு மலை வனம் வனாந்திரங்களைக் கடந்து கால் நடையாக வரவுமில்லை, விமானத்தில் வருகிறார், அப்படி 'நவநாகரிகத்தைப் பயன்படுத்தி, ருசி பார்த்துக்கொண்டே, அந்த நாகரீகம் வேண்டாம்—அது விஷம் என்று உபதேசிப்பது,முதல்தரமான துரோகம், என்று மக்கள் தீர்மானிக்கிறார்களா! மயக்கத்திலிருக்கிறார்கள். —மதி துலங்கவில்லை. வாலிபர்கள், ஏன் இத்தகைய பித்தலாட்டப்போக்கின் பிடியிலே மக்களை விட்டு வைக்கிறார்கள். சங்கராச்சாரியாரின் பறந்த அனுபவம் போதாதா, அவருடைய உபதேசம் பயனற்றது என்பதையும், அவருக்கு மக்கள் அளிக்கும் உயர்வுக்குப் பொருளில்லை என்பதையும் நிரூபிக்க. ஏன் மக்கள் கேட்கக்கூடாது—அவரைக் கேட்க அச்சமாக இருந்தால் — தங்களைத் தாங்களே ஏன் கேட்டுக்கொள்ளக் கூடாது? பழமையே புனிதமானது என்று பேசும் பூரி சங்கராச்சாரியார், ஏன் புதுமையின் உதவியை நாடினார் என்று! தாம் உபதேசிக்கும் கொள்கையில் நம்பிக்கை இருந்தால், பறந்துவரச் சம்மதிப்பாரா? நன்றி காட்டவேண்டும் என்ற நல்லறிவு இருப்பவராவாவது காட்டிக்கொள்ள வேண்டுமானால், பறந்த அனுபவத்துக்குப் பிறகாவது நவநாகரிகம், மேனாட்டு அறிவு முறை, விஞ்ஞானம் ஆகியவற்றைத் தூற்றாமலாவது இருக்கவேண்டும்!

அவருக்கு, உண்மையிலேயே, நவநாகரீகம், மேனாட்டு அறிவு முறை, விஞ்ஞானம் ஆகியவைகள், பிடிக்கவில்லை என்றால், அவைகளின் கேடுகளை மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு, அவைகளின் விளைவுகளை உபயோகித்துக் கொள்ளும் போக்கையாவது விட்டுவிட வேண்டாமா? ஆற்றோரத்தில், பர்ணசாலை அமைத்துக்கொண்டு, பசும்புற்றரையிலே உட்கார்ந்தவண்ணம், பரந்த வானவீதியில், பறந்து செல்லும் புள்ளினங்களைக் கண்டுகொண்டிருக்கலாம் — விமானத்தில் ஏறுவதா! விமானம், நவநாகரிக, மது அல்லவா? மதுவைப் பருகிக்கொண்டே மது விலக்குப் பிரசாரமா? சரியாகுமா?

✲

# ★ குறிப்புகள் ★

—✲—

காஷ்மீர் சம்பந்தமான பிரச்னை தீர்க்கப்படவில்லை. அதற்காக, ஐக்ய நாடுகள் சபைக்குச் சென்றிருந்த சர். கோபாலசாமி ஐயங்கார், திரும்பி வந்திருக்கிறார், சர்க்காரிடம் கலந்து பேச.

* * *

பலஸ்தீனத்தைப் பிரிவினை செய்வது, வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால், சர்வதேச ராணுவம் ஒன்று இருந்து நடத்தினால் தான் முடியும், என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

* * *

கொரியாவில் ஒரு பகுதியைத் தனி அரசாகப் பிரகடனம் செய்துள்ள சோவியத் போக்கு, அமெரிக்காவில் பலமாகக் கண்டிக்கப் படுகிறது.

* * *

நிறவெறியைப் போக்கி, நீக்ரோக்களுக்கு உரிமைதரவேண்டும் என்று ட்ரூமன் கொண்டுவரும்திட்டத்தை, அமெரிக்காவின் தென்பகுதியினர் பலமாக எதிர்க்கிறார்கள்.

* * *

எல்லைப்புற மாகாணத்தில், லீக் தொண்டர்களும், எல்லைக் காந்தியின் செஞ்சட்டையினரும் ஒன்று கூடிக் கலந்து பேசினர். பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் எல்லைக் காந்தி கபார்கான் கலந்துகொள்வார் என்று கூறப்படுகிறது.

* * *

நமது மாகாணத்திலே, பல ஜில்லாக்களிலே, விளைவு இல்லாமற் போய்விட்டதால், நிலவரி, 40 இலட்ச ரூபாய்க்குமேல், 'வஜா' செய்யவேண்டி நேரிடுமென்று தெரிகிறது.

* * *

கத்தியவார் பகுதியிலுள்ள பல குட்டிச் சமஸ்தானங்களை இணைத்து சௌராஷ்டிரம் என்ற அரசு அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு, நவநகர் மன்னர், ஆட்சிக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆரம்பவைபவத்தைச் சர்தார் படேல் நடத்திவைத்தார்.

* * *

பர்மாவில், பல இலட்சம் ஏகர் நிலம் இந்தியருக்குச் சொந்தமாக இருக்கிறது. பர்மா மேற்கொள்ள இருக்கும், புதிய தேசிய திட்டத்தினால், இந்த உரிமைக்குக் கெடுதி விளையுமோ என்ற பயம், பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. இது பற்றி கலந்து பேசும்படி, பர்மாவிலுள்ள இந்தியத் தூதவருக்கு இந்திய சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

* * *

கலகப்பிரதேசம் என்று ஏதேனும் ஓரிடம் சர்க்காரால் அறிவிக்கப்படுமானால், அங்கு கலகத்தை அடக்கக் கடுமையான முறைகளைக் கையாள, மரணதண்டனை தரக்கூடியவிதமாக, புதுச் சட்டமொன்று சென்னை சட்டசபையில் உருவாகிறது. கலகத்தை அடக்க, துப்பாக்கிப்பிரயோகம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால், சப்-இன்ஸ்பெக்டர் அதற்கான உத்தரவு பிறப்பித்துவிட, புதிய சட்டம் இடமளிக்கிறது.

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 29—2—48 [ஞாயிறு

# புது நெறி

●

"பச்சை மரம் பட்டுவிடும்!
இச்சைக்கினியவளும்வெகிடுவாள்
இடுகாடு!

துச்சமென விடுவாய் தோல்வு
லக பந்தமெலாம்

பிச்சு நினைப்பகற்று, பேதாய்பிணி
அகல!"

"இச்சை ஓர் நச்சரவு! போல்லா
இருள் வாழ்வே தீண்டிடினே!
உச்சிக்கிளை தாவும் மந்தி என
உன் மனதை

மாய மச்சுக் கனுப்பாதே, மற
வாதே மாதவன் சோல்"

"கனகமணி ஆடை உண்டு! கனி
ரச வாழ்வும் உண்டு!

கட்டழகி கூட்டம் உண்டு! காமக்
கடலும் உண்டு

களித்திடப் பலவும் உண்டு,
உண்டு கண்டாய் ஒன்று

கவலை தான் மாண்டதில்லை,
மாளச் செய்யும்"

கேட்பவர் கண்கள் கசிய, இது போல, பற்று அறுக்கிடும் மனப் பான்மையை உண்டாக்கும், பதிகம் பாடியும், அதற்குப் பத உரை, பொழிப்புரை கூறியும், ஞானிகள், குருமார்கள், வேதாந்திகள், அற நெறி காட்டுவோர் எனும் பல்வேறு பெயர்களுடன் உலவி, பாமரருக்கு உபதேசம் புரிந்தும் வந்தவர்கள், பலருண்டு பண்டு தொட்டு இன்றுவரை. நாடெங்கும் அவர்கள் சென்று நல் வழி காட்டிட, மக்கள், அவர்கள் கூறும் அறநெறியிலே சென்றிட முடியுமா முடியாதா என்பது பற்றியும் யோசிக்காமல், அந்த யோசனை தோன்றின போதிலும், முயற்சியும் செய்யாமல், உபதேசம் அளித்தவரைப் பாராட்டியும், அடிபணிந்தும், அவருடைய சீடகோடிகள் நாங்கள் என்று பெருமிதத்துடன் கூறிக் கொண்டும், அவருடைய உபதேசத்தை ஊரெங்கும் உலகெங்கும் பரவச் செய்திடும் பணி புரியப் போவதாகக் கூறியும், அந்தப்பணிக்கெனத் தமது செல்வத்தைத் தந்தும் வரலாயினர். ஏழைகளாக இருக்கும் வரையில், உபதேசம் செய்தவரை உள்ளன்புடன் போற்றுவது மட்டுமே சாத்யமாக இருந்தது பலருக்கு. ஆனால் அவர்களில் சிலருக்கு செல்வம் சேர்ந்ததும், அன்புரை மூலம் போற்றுவதுடன் கூட, காணிக்கை செலுத்தித் தமது போற்றுதலைக் காட்டிக் கொள்ள எண்ணம் பிறந்தது. அருள் மொழி கூறியவரைக் கண்ட உடனே, அடியற்ற நெடுமரமெனக் கீழே வீழ்ந்து வணங்கியது போய், கீழே வீழ்ந்து வணங்கு முன்னர், அவர் பாதத்திலே கொஞ்சம், பொன்னும் பொருளும் கொட்டிக் கும்பிடும் முறை புகுந்தது. உள்ளன்பினைத் தருவதே உத்தம மார்க்கம் என்பது போய், ஊரார் கண்டு, தன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கொள்ளக் கூடிய விதமாக, குருவுக்குக் காணிக்கை செலுத்தும் முறை ஏற்படலாயிற்று. இதனால், குரு பீடம் அமைந்ததுடன், உபதேசத்தின்படி நடந்து கொள்கின்றனரா இல்லையா, என்ற பிரச்னை மறைந்து, என்னென்ன காணிக்கை செலுத்தினர் என்று கவனிக்கும் போக்கு, ஊராருக்கும், குரு பீடத்துக்கும் ஏற்படலாயிற்று. பணம் படைத்த பிறரும், "இவன் மட்டுந்தானோ காணிக்கை செலுத்த வல்லவன்? இவனிடம் மட்டுந்தானோ பணம் உண்டு? நான் பாரீரோ! இதோ அவன் கண்டு வெட்கப்படக் கூடிய விதத்திலே, நான், குருவுக்கு ஒரு காணிக்கை செலுத்துகிறேன் பார்!" என்று எண்ணலாயினர்— பேசத் தொடங்கினர்.

"அறுபதுவேலி நிலம்—அயன். அழகானதென்னந்தோப்பு. அதன் நடுவே ஓர் பளிங்கு மண்டபம். இவ்வளவும், அருமறைநாதர் குரு காணிக்கையாக்கினார்" என்ற செய்தி கிடைக்கிறது பணம் படைத்த ஒருவருக்கு. "அருமறைநாதன்! அறுபதுவேலி!" —என்று பொறுமையுடன், கூறிவிட்டு, அந்தப் பணம் படைத்தவர் கேட்கிறார் சேதிகூறினவரை," "இந்தக் காணிக்கையை ஒரு பிரமாதம், என்று மக்கள் புகழ்கிறார்களோ?" என்று. "ஆமாம்! புகழத்தானே செய்வர்! மக்கள் மட்டும் என்ன? குரு பீடத்திலேயே இப்போது அருமறைநாதருக்கு அபாரமான மதிப்பு. குணக் குன்று எனும் பட்டமளிக்கவும் ஏற்பாடு நடக்கிறது" என்று கூறுகிறார் சேதிபரப்பும் சிகாமணி.

"நூறுவேலி அயன் நஞ்சை—மல்லிகைத் தோட்டம் ஒன்று—அதன் நடுவே மணி மண்டபம் ஒன்று—தோட்டத்தை அடுத்து ஓர் சிங்காரத் தடாகம்—அந்தத் தடாகத்துக்குச் செல்ல, மணி மண்டபத்திலிருந்து ஓர் சுரங்கவழி—இவ்வளவும், என் காணிக்கை," என்று கூறுகிறார், பணம் படைத்த பக்தநாதர். குணக் குன்று பட்டம் முன்னவருக்கென்றால், இவருக்கு, பக்த மக்தவநாதர் என்று, அதனினும் சிறந்த தான பட்டம் கிடைக்கிறது.

இவ்விதமாக, உபதேசஉரைகளைக் கேட்டு உள்ள மகிழ்ந்தவர்கள், அந்த உரைகளின்படி, ஊரைத் திருத்தி அமைப்போம், மக்கள் நடவடிக்கைகளிலே, அந்த உரைகள், மிளிரும்படிச் செய்வோம், என்று முயற்சி செய்யாமல், காணிக்கைகளைக் குவித்து, குருபீடங்களைச் செல்வம் கொழிக்கும் இடங்களாக்கி விட்டனர். தற்பெருமைக்கு உதவுவது மட்டுமல்ல இந்தப்போக்குக்குக் காரணம், உயர்ந்த உபதேச உரைகளின்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதைவிட, அந்த உபதேசத்தைக் கேட்டுப் பூரித்த தன் அறிகுறியாக 'காணிக்கைகள்' செலுத்துவது, சுலபமான காரியம் என்பதுதான், இந்தப் போக்குக்கு முக்கியமான காரணம். இப்படிக் காணிக்கை செலுத்தினவர்கள் எல்லோருமே, போலிகள் என்பதல்ல பொருள். சிலர் உண்மையாகவே, அவ்விதம் செய்வதுதான் நல்லது என்று நம்பினர். எவர் எவ்வித நோக்கங்கொண்டு, இந்த முறையினை வளர்த்திருப்பினும், விளைவு ஒன்றுதான் கிடைத்தது — உபதேசங்கள் மறைந்தன, மடாலயங்கள் மிகுந்தன—அங்கு பொன்னும் பொருளும் குவிந்தன. மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவிடுவானேன்—வௌவால்கள், வல்லூறுகள், அட்டைகள், தொட்டால் ஒட்டிகள், எனும் பலவகையினர் மடாலயங்களைப் பிடித்துக்கொண்டு, உபதேசத்தைப் பரப்புவதைவிட, வேகமாகவும், முறையாகவும், தங்கள் ஆதிக்கத்தைப் பரப்புவதில் முனைந்தனர்.

"மாலை நேரம் மதியும் மேக

மும் மற்போர் வீரர்கள் போல, வான வீதியிலே தெரிந்திடக் கண்டேன். அந்தக்காட்சி, நல்லெண்ணமும் பாசபந்தத்தின் பாற்பட்ட தீய நினைவுகளும் ஒன்றோடொன்று போரிடும், மனித உள்ளத்தை, எனக்கு நினைவூட்டலாயிற்று'' என்று உபதேசம் செய்து வந்த முறை காணிக்கை குவிந்து, பீடம் வளர்ந்து, மடாலயம் ஏற்பட்ட பிறகு, இருக்க முடியுமா-சாத்தியமாகுமா? உபதேசம் அருளிய உத்தமர், நாடெங்கும் சுற்றி. காணும் காட்சிகளிலெல்லாம்மக்களுக்கு நல்லுரை கூறுவதற்கான கருத்தினைக் கண்டு, தெளிந்து, வாழ்வு நடாத்தினவர். மதியும் மேகமும் கண்டார் அவர். மடாலயம் ஏற்பட்ட பிறகு? மதியும் மேகமும், தெரியுமா? மேகத்தை விரட்ட மதி போரிடும் காட்சி தெரியுமா? மதிமுகவதியின் மோகனப் புன்னகையும், அம்மதிமுகவதிக்கு எவ்வளவு வேண்டுமாயினும் நிதி தருவேன், என்று கூறும் போக்கும், நிதிபால் அவளை அடைய முடியாதே என்று கூறிடின், சதி செய்தேனும் அவளைக் கொண்டுவந்தாகவேண்டும், சச்சிதானந்தத்தின் மீது ஆணை, என்று கூறிடவுமானகாட்சிகளன்றோ தெரியும். உபதேசம், பிறகு, எவ்வண்ணம் இருக்கமுடியும்! மதியும் மேகமும் போரிடும் உவமையைக் கூறவும் முடியாதே! மனம்விட்டுப் பேசுவதானால், வெள்ளியன்று வந்தவளுக்கும் வியாழன் முதல் தங்கியிருந்தவளுக்கும், நீயா, நானா, என்று போட்டியும் பூசலும் ஏற்பட்டது போல, மக்கள் மனதிலே நல்வினைக்கும் தீவினைக்கும் போர் மூண்டெழுகிறது, என்றுகூற முடியும்! காட்சிக்கேற்ற கருத்துதானே சாத்தியம். இதைஉணர்ந்தே, இன்றைய உபதேசிகள் பெரும்பாலும் அதிகம் பேசுவதுமில்லை போலும்!

பச்சைமரம் பட்டுவிடும்
இச்சை ஓர் நச்சரவு

என்று பதிகம் பாடிய முறை பட்டுப்போய்,

ஆலயத்தில் ஆடிடுவாளே அழகி,
அழைத்துவா, அவளை ஆவி
போகுமுன்பு.

"காலில் சதங்கைகொஞ்ச, கையிலே வளை ஒலி மிஞ்ச, கோலமயிலெனவே ஆடி, கொள்ளை கொண்டாள் மனதை.

கோளாய், மின்னல் இடையில், தளர் நடையில், இருவிழியில், கனிமொழியில் எங்கும் இளமை பொங்கும்; இன்பம் பொங்கும்—அவளை அடையாது போனால், என் ஆவி தங்கும் என்று எண்ணுகிறாய். போ! போ! காலை அரும்பி பகலெல்லாம் போதாகி மாலை மலரும்நோய் என்னை வாட்டுகிறது. பாட்டும் வேண்டாம், பக்தர் கூட்டமும் வேண்டாம், பாவையின் தரிசனம் வேண்டும்—இன்றே—இப்போதே—"

இப்படி அல்லவா, பேச்சு ஏற்பட்டுவிடும்!

நன்னெறி கூறினபோது, அந்நெறி செல்வோம் என்று முனையாமல், நன்னெறி கேட்டதற்கு மகிழ்ந்து, செல்வத்தைக் காணிக்கை என்ற முறையிலே, குவித்துவிட்டால், நன்னெறி கூறினவரால் கிடைத்த செல்வத்தைத் தமதாக்கிக் கொண்டு, பின்னர் கிளம்பும் பக்தர்கள், சித்தத்தைச் சிவன்பாலா செல்லவிடுவர்!

இந்த இழுக்குவந்து சேர்ந்த பிறகு, மக்கள் முதலில் மெள்ள மெள்ளப் பேசி, பிறகு உரத்த குரலில் பேசி, பிறகு, அக்ரமக்காரரை அழித்தாகவேண்டும் என்று முழக்கமிடுவர். இடையே எவ்வளவு, பொன்னும் பொருளும், நேரமும் நினைப்பும் பாழ்பட்டு விடுகிறது, என்ற கணக்குப் பார்ப்பதில்லை. இவ்வளவும் எதனால்? உபதேச உரைகளைக் கேட்டபோது, உள்ளத்தில் தோன்றிய மலர்ச்சியை, வாழ்க்கையைத் திருத்தி அமைக்க முற்படாமல் போன குற்றத்தினால்தான்.

சித்தார்த்தர் புத்தராகி, புதுவழியைப் பொன்மொழி மூலம் கூறினார். அதுவே மெய்வழி என்றனர். அவரடி தொழுதனர். அவ்வழி செல்வோம் என்றனர்—மக்கள் கூறினர்—மன்னரும் கூறினர். ஆனால், அவ்வழி சென்றனரோ, கடைசிவரை! அவர் வழி சென்றிருப்பின், அவர் அருளிய அறநெறியிலே நாடு நின்றிருப்பின், இன்று நாட்டிலே நானாவிதமான புராணங்களும், அவைகளை ஒட்டிய பழக்க வழக்கங்களும் ஜாதிகளும், அவைகளால் ஏற்படும் பேதக் கொடுமைகளும், இருக்க முடியுமா? புத்தர், எந்தெந்தக் கேடுகளைக் களையவேண்டுமென்பதற்காகப் போரிட்டாரோ, அவை யாவும், அவர் காலத்திலும், அவருடைய உரையினை உண்மையான முறையிலே போற்றி, கட்டிக் காத்து, வளர்ப்பவர்கள் இருந்த வரையிலும், பதுங்கிக் கிடந்தன—பிறகு பாய்ந்து வந்தனவே! அந்தக் கொடுமைகளுக்கிடையே தானே, நாடு இன்றும் இருந்திடக் காண்கிறோம்.

அரசு, அழகு மனைவி, இளம் குழந்தை, இவைகளைத் துறந்து, சித்தார்த்தர், காடு சென்ற காலை, நாடு, எவ்வளவு உருகி யிருந்திருக்கும்.

அவருடைய இளமையும் எழிலும், பட்டினியாலும் தவத்தாலும், சொருக்கப்பட்டு, பொன்னிறமேனி, எந்நிறமோ என்று எண்ணிடத்தக்க விதமாகி, அவர், காடு காடாக அலைந்த காலை, மக்கள், எவ்வளவு, மனம் உருகியிருப்பர்.

இறுதியில் அவர் மெய்வழியைக் கண்டறிந்து மேதினி உய்ய அதனை உரைத்தபோது, மக்கள் தாயைக் கண்ட சேயெனச் சென்று அவர் பக்கம் நின்றனர்.

அவர் வரவுக்காக, அரசுகள் தவம் கிடந்தன.

அரண்மனைகளெல்லாம், அவர் ஒருமுறை அங்கு அடி எடுத்து வைத்தால் தங்கள் அந்தஸ்த்து உயரும் என்று எண்ணின.

வல்லரசர்கள் பலர், அவர் சொற்படி நடக்கச் சித்தமாயினர்.

வடநாட்டு அரசுகள் பலவும், புது மார்க்கத்தைத் தத்தமது அரசுகளிலே புகுத்தின.

நாடெங்கும், அந்தப் புதுமுறை போதிக்கப்பட்டது.

கடலைக் கடந்து சென்றது, அவருடைய நன்னெறி.

அவர் காட்டிய வழி, முன்பிருந்த எவ்வழியினையும் விடச் சிறந்தது, என்று எவரும் கூறினர். புத்த மார்க்கத்தின் வெற்றி பூரணமானது என்று கூறினர், களித்தனர்; கோல் கொண்டோர் விழா நடத்தினர்; எல்லாம் நடந்தேறிய பிறகு—இன்று - புத்த மார்க்கம்—புது வழி—அரசைத் துறந்து அடவி சுற்றி, அகத் தூய்மைக்காக அரும்பாடுபட்டு, அவனி உய்ய மெய்வழி கண்டு பிடித்த போதகாசிரியப் பெருந்தகையின் மெய் வழி—எந்த நிலையில் இருந்திடக் காண்கிறோம்! ஏன், இந்நிலை?

புதுவழியும், அதற்கான புத்தறிவும், இங்கு, யாரால், எந்தெந்தக் காலத்தில் புகுத்தப்பட்டபோதும், பூரிக்கவும் பாராட்டவும், ஏற்பிய

மக்கள், அவ்வழியினை நிரந்தரமாக்கவும், பழையவழியினை விட்டுவிடவும் வேலை செய்வதைவிட, அந்தப் புதுவழி கூறினவருக்குத் தமது புகழுரையை வழங்கிவிட்டு, தமது பழைய வழியை அறவே நீக்காமல், காணிக்கை தருவதன்மூலம், தங்கள் நல்லெண்ணத்தைக் காட்டிடு போக்கில் நடந்துகொண்டனர். இதனால், புதுவழி, சிலபலகாலத்துக்குப்பிறகு பலவழிகளிலே ஒன்று என்ற அளவுக்கு வந்துவிட்டதுடன், சிலபலருக்கு மடாலயவாழ்வும், பக்தர்களின் குருமார் என்ற பதவியும் பெற்றுத்தரும் முறையிலே மாற்றப்பட்டுப் போயிற்று. நெடுநாட்களாகத் தேடித் தேடி அலைந்து, 'மாணிக்கத்தைக்' கண்டு பிடித்துப் பலருக்கும் காட்டி மகிழ்ந்து பெருமையுடன் பேசியான பிறகு, "மாணிக்கத்தை" தனது பழைய பேழையிலே போட்டுவைக்கிறான். தாராளமாகச் செய்யட்டும். ஆனால் அந்தப்பழைய பேழையில், உள்ள "ஓட்டை ஒடிச்சலைப்" பழுதுபார்க்காமலும், அதிலே குவிந்துள்ள தூசினைப்போக்காமலும், அதைத் திறக்கக்கூடிய கள்ளச்சாவி கொண்டுள்ள, கயவனிடமிருந்து, சாவியைப்பறிக்காமலும், பேழைக்குள்ளே ஏற்கனவே போட்டுவைக்கப்பட்டுள்ள கண்ணாடித் துண்டுகளையும், கருங்கல் ஓடுகளையும், செம்பு பித்தளைத்துண்டுகளையும், செல்லாக்காசுகளையும், அப்புறப்படுத்தாமலும், அரும்பாடுபட்டுக் கண்டு எடுத்த மாணிக்கத்தை, அந்தப் பேழையிலேயே போட்டுவைப்பது சரியா? நாம் இதுபோலவேதான் செய்துவந்திருக்கிறோம் பன்னெடுங்காலமாக, என்பதை ஆர அமர இருந்து எண்ணிப்பார்த்தால் எவரும், ஒப்புக்கொள்வர். புதிய நெறியையும் பழைய முறைகளையும், ஒருசேர மனப்பேழையிலே போட்டு, அந்தப் பேழையைத் திறந்திடும் கள்ளச்சாவியினை எந்த எத்தரும் கொண்டிருக்கும் நிலையையும் மாற்றாமல் இருந்துவிடுகிறோம். இதனால் சில காலத்துக்குப் பிறகு, மாணிக்கம் களவாடப்பட்டோ, பிறகற்களுடன் கலந்து, கண்டு பிடித்தெடுப்பதற்கு முடியாதபடியோ ஆகிவிடுகிறது, மீண்டும் அலைகிறோம், அலைகிறோம், மாணிக்கம் தேடிக்கொண்டு. இந்த நிலை மாறவேண்டும். செம்பொன்னும் ஓடும் ஒக்கநோக்கும் இயல்பினரான துறவிகளிடம் நாம், போக போக்கிய அவாவைக் கிளறிவிடும் பொன்னையும் பொருளையும் கொடுத்து அவர்களைப்பூமான்களும் சீமான்களும் பேட்டிகாணும் 'பெருமான்கள்' ஆக்கியிருக்கக்கூடாது. பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து, நிழல்கண்டு படுத்து, நிர்மலனைக்கண்டறியும் பணியிலே ஈடுபட்டிருக்கவேண்டியவர்களிடம், தங்கவட்டிலும், வெள்ளி குத்துவிளக்கும், பட்டுபீதாம்பரமும், பவுன்தோலும் வைர இழைப்பும் கொண்ட உருத்திராட்ச மாலையும், சேர, இடந்தந்திருக்கக் கூடாது, ஆனால் இந்தநிலைமையை உண்டாக்கி வைத்திருக்கிறோம். ஏன்? அதைப் பற்றிச்சிந்திக்கவும் மறுக்கிறோம். புத்தபிக்ஷுக்கள், ஊருருக்கும்சென்று உண்மை அறிவினைப்பரப்பினர், என்றும் படிக்கிறோம். இங்கு மடாலயங்களிலே நடைபெறும் பட்டினப்பிரவேசங்களையும் கண்டு களிக்கிறோம்.

சித்தார்த்தர், களைத்து, ஒருமரத்தடியில் சாய்ந்துகிடந்தார். அது கண்ட மாதொருவள், சென்று, உபசரித்து அந்த உத்தமரின் அருளைப்பெற்றாள், என்ற சம்பவத்தை யாரேனும் கூறும்போது, கேட்டுப் பூரிக்கிறோம். இப்படியன்றோ உத்தமர்களின் வாழ்க்கை இருக்கவேண்டும் என்று உரைக்கிறோம்; அதே போது, பத்துவிரலிலும் மோதிரங்கள் ஜொலிக்க, கைகளைப் பக்கத்திலே வரும் பிரதமசீடர்கள் தாங்கி வர, உறுப்புகளின் அமைப்பைக் கெடுக்கும் அளவுக்குஉடல்பெருத்து சிறுமலை பெயர்ந்து வந்ததென நடந்துவரும், சொரூபங்களையும் காண்கிறோம், சிவ சிவா! என்று போற்றுகிறோம். இந்த விதமான போக்கினாலேதான், இந்நாட்டிலே, பலசமயங்களிலே, பல்வேறு அறநெறிகள் கூறப்பட்டும், ஒருநெறியும் நிலைக்காமல், எல்லா நெறிகளிலும், கள்ளியும் காளானும், நிரம்பி விட்டன.

"பசுவைப்பூஜிக்கிறோம், ஆனால் பசுவை எப்படி வளர்க்கவேண்டும் என்பதை மறந்துவிடுகிறோம். பசுவைப்பூஜிக்கும்முறை குறைந்தால் பாதகமில்லை, பசுவை நல்லமுறையிலே வளர்க்கும் முறையைக் கற்றுக்கொள்ளவேண்டும்" என்று டில்லியில்கூடிய கால்நடைக் கண்காட்சியிலே, பண்டித நேரு பேசியிருக்கிறார். கோ சேவாசங்கம் அமைக்கவும், கோமாதாவைக் கும்பிடவும் மக்களுக்கு இருக்கிற ஆர்வத்தின் அளவுக்குக் குறைவில்லை — ஆனால் பூஜைக்கு உரியது என்று எந்தப்பசுவைப்போற்றுகிறார்களோ, அந்தப் பசுவை, எப்படிச் செம்மையாக வளர்ப்பது என்பதிலே அக்கரை இருப்பதில்லை, அதற்கான ஆராய்ச்சியும்கிடையாது. அதுபோலத்தான் பக்தி காட்டவும் காணிக்கைசெலுத்தவும் தெரிந்துகொண்டுள்ள அளவுக்கு, நன்னெறி கூறினவர்களின் உரைப்படி, ஊரைத்திருத்தி அமைக்கத்தெரிவதில்லை—அதற்கான முயற்சியும் கிளம்புவதில்லை புத்தர்போதனைக்குப்பிறகும், மதத்தின் பெயர் கூறி வாழப்பல எத்தர்களும், பழைய வழியிலே நடக்கும் விசித்திரசித்தர்களும், இங்கு இருக்கிறார்கள் என்றால், புத்தரின் புதுமார்க்கம், இங்கு தோன்றினதால், உருவான, நிரந்தரமான, பயனுள்ள, பலனை நாம்பெறவில்லை என்றுதானே பொருள்?

பழையன கழிதலும் புதியன புகுதலும் முறை. இங்கோ, புதியன புகுதலும், பழையன, அவற்றினை விழுங்கலும் நடைமுறையாக இருக்கிறதே. பலன் காணாத காரணம் இதுதானே!

அழகான புதிய மோட்டார்—ஆனால் அதை இழுத்துச் செல்ல, புராதன வண்டியிலே பூட்டப்பட்டிருந்த எருதுகள்!

காக்கி நிஜாரும், கவசத் தொப்பியும், காலில் பூட்சும் அணிந்த பட்டாளத்துக்காரர்—ஆனால் அவர்கள் கரத்திலேயோ, பழங்காலத்து வில்லும் அம்பும்!

இவ்விதமான காட்சியைக் கண்டால், கைகொட்டிச் சிரிக்கமாட்டார்களா?

அதுபோன்றதுதானே, புதுநெறி கிடைக்கும் ஒவ்வொரு சமயத்திலும், பழைய முறைகளுடன், அவற்றினைக் கொண்டுபோய்ச் சேர்க்கும், போக்கு. எப்படி இதனை அனுமதிப்பது? புதுநெறியினால் பலன் காணவேண்டுமானால், உள்ளன்பு புதுநெறியிடம் இருக்குமானால், பழய பல முறைகளோடு, இதனையும் சேர்த்துவைத்து அழகு பார்க்கும் முறை ஆகாது.

ஆகாது! ஆமாம், நிச்சயமாக ஆகாதுதான்—இனி இப்புது நெறியினைத்தான் நாட்டுக் குரைப்போம் என்று கூறவே, ஆர்வமிக்க அன்பர்கள் அனைவரும் முனைவர். அவர்களின் ஆர்வததிலே நமக்குத் துளியும் சந்தேகம் கிடையாது—ஆனால்,

அதற்கு அவர்கள் கையாளப் போகும் முறை என்ன? அதிலே தானே 'சூட்சமம்' இருக்கிறது. புது நெறியே சிறந்தது என்று பேசி மட்டும் பயனில்லை. பழைய வழிகளை, நிலைக்கச் செய்யும், முறைகளை, அப்பழுக்கின்றி, விட்டுவைத்துக்கொண்டும், பாதுகாப்பளித்துக் கொண்டும், புதிய நெறி பற்றிய விளக்க உரைகளைக் கூறிப் பயன் காணமுடியாது. இரண்டிலே ஒன்றுக்கே, நமது உள்ளம், என்பதை முடிவுசெய்வதுடன், கொண்ட முடிவுக்கு ஏற்றவண்ணம், முறைகளை மாற்றிக் கொள்ளும், திடசித்தத்தை நாமும் கொண்டு, நாட்டினரும் கொள்ளச் செய்யவேண்டும். ஏசுவின் வாசகங்களைக் கேட்டு, மனச்சாந்தியும் சமாதானமும் பெற்றோம், என்று கூறிக்கொண்டே, ஏசுவின் புது மார்க்கத்துக்கு முன்பு எந்தெந்தத் தேவதைகளைத் தொழுதுவந்தார்களோ, அந்த, தார், ஓடின், மினர்வா, அபாலோ, ஜூவஸ், மெர்குரி, நெப்சூன் முதலியன முன்பு வழக்கப்படி முழங்காற்படியிட்டு, பலிகொடுத்து, மந்திரம் ஜெபித்துக் கொண்டும், இருந்திருந்தால், உலகிலே இவ்வளவு பெரும் பகுதியான இடத்திலே, கிருஸ்து மார்க்கம் பரவி இருக்குமா, நிலைத்துத்தான் இருக்குமா, என்பதை நண்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நாம், இதுவரை செய்து வந்ததெல்லாம், நாட்டிலே தோன்றிய புது நெறிகளைக் கண்டு போற்றுவதும், பிறகு மறந்துவிடுவதுந்தான்.

அன்பு, அறிவு, ஆகியவற்றின் தூதுவர்களாக, உபதேசியார்களாக, ஒருகாலத்தில் உலவிய துறவிகளையே நாம், இன்று தம்பிரான்களாக்கி, மடாதிபதிகளாக்கி, சன்னிதானங்களாக்கி, விட்டிருக்கிறோம். பசு,பதி, பாசம் எனும் நுட்பமும் நுண்ணறிவும் நிரம்பிய தத்துவத்தைத்தரப்பெற்று ஒருகாலத்தில் மகிழ்ந்தோம்—பிறகோ, பட்டினப் பிரவேசம், பாத காணிக்கை, பரிவாரம், என்ற அளவிலே முறை, திரியக் கண்டு மௌனமாக இருந்துவிட்டோம். கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன் படுத்திக்கொள்ளத் தவறியிருக்கிறோம். உத்தமர்கள் தந்த உபதேசங்களைத்தனையும், போற்றுவதோடு விட்டு விட்டோம். ஜாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதே எனது இலட்சியம், என்று கூறின, உத்தமரின் வழியை உண்மையுடன் பின்பற்றுவதற்காவது, நமது வாழ்நாளில் முயல வேண்டும். இந்தப் புதுநெறியை நாம் கடைப் பிடிக்கப் போவது உறுதியானால், பழைய முறைகளிலே உள்ளவும், நமது மனதையும் வாழ்வையும் பாழ்படுத்துவனவுமாகிய, ஜாதிக் கொடுமையைக் களைந்தெறிய வேண்டும். அதற்கு, பழைய முறைகளை நீடிக்கச் செய்யும், கருத்துகள் பரவி, செல்வாக்குப் பெறமுடியாதபடி நிலைமை வளரவேண்டும். இதைத் தம்பிரான்களும் ஜீயர்களும் செய்ய முடியாது. நீங்களும் நாமும் செய்யலாம், என்று நாட்டுக்கு நல்வாழ்வு கோரும் வாலிபர்கள், எந்தக்கட்சியினராயினும், எண்ணித் துணிய வேண்டும். அப்போதுதான், புது நெறி கண்டோம் என்பதற்கு முழுப் பொருள் உண்டு.

✱

12-ம் பக்கத் தொடர்ச்சி

ணம். ஆகவே லண்டனுக்கு வெளிப் புறமுள்ள தென் ரயில்வே ஷெட்டுகளில் பரிக்ஷார்த்தமாக இயற்கை சந்திர ஒளியை விட இரு மடங்கு அதிக பிரகாசம் வாய்ந்த மின்சார விளக்குகள் கஜத்திற்கு ஒன்று வீதம் போடப்பட்டுள்ளன. இவ்விளக்குகள் 150 அடி உயரமுள்ள கோபுரங்களின் மீது அமைக்கப்பட்டுள்ளன. இவைகளிலிருந்து வரும் ஒளியின் மூலம் 200 கஜ தூரத்திற்கப்பாலுள்ள வாகனங்களின் மீது குறிக்கப்பட்டிருக்கும் அடையாளங்களை மிகத் துல்லியமாகப் பார்க்க முடிகிறது. 'செயற்கை சந்திரர்'களைப் பற்றி இன்னும் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

## நாளொன்றுக்கு 150 ராத்தல் பால் தரும் பசு.

உலகிலேயே மிக அதிகமான அளவு பால் தரக்கூடிய பசு ஒன்று அமெரிக்காவில் தானிருக்கிறதென நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் சமீபத்தில் ஹாம்ஷயர் மாகாணத்தில் ஒரு குடியானவனிடமுள்ள ப்ரிஷியன் ஹீபர் (Friesian heifer) என்ற சந்ததியைச் சேர்ந்த பசு ஒன்று அமெரிக்கப் பசு கொடுத்த பால் அளவையும் தாண்டிவிட்டது. அமெரிக்கப் பசு 365 நாட்களில் மொத்தம் 41943 ராத்தல் பால் கொடுத்தது. ஆனால் இந்த பிரிட்டிஷ் பசு 329 நாட்களில் மட்டும் மொத்தம் 41952 ராத்தல் பால் கொடுத்திருக்கிறது. வருடம் பூர்த்தியடைய 36 தினங்கள் பாக்கியிருந்த போதிலும் இப்பசு நாளொன்றுக்கு 150 ராத்தல் பால் கொடுத்து வருகிறது. இப்பசுவிற்குத் தினந்தோறும் கொடுக்கப்படும் தீனியில் அரை காலன் (Gallon) பிரிட்டிஷ் சாராயமும் (Beer) அடங்கும்.

✱

## சென்னை சர்க்கார் பட்ஜட்

## புதுவரி கிடையாது. பூரண மது விலக்கு.

**1948—49**-ம் ஆண்டுக்கு சென்னை சர்க்காரின் பட்ஜட் விபரம், நிதி மந்திரி கனம் பி. கோபால் ரெட்டி அவர்களால் 25-2-47-ல் சென்னைசட்டசபையில் சமர்பிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழே தரப்படுகிறது.

**எதிர்பார்க்கப்படும் வருமானம்**

**50,32,31** (ஆயிரங்களில்)

**எதிர்பார்க்கப்படும் செலவு**

**55,93,60** (ஆயிரங்களில்)

**பற்றுக்குறை**

**5,62,00** (ஆயிரங்களில்)

இந்தக் கணக்கின்படி ஐந்துகோடி அறுபத்திரண்டு லட்சம் துண்டு விழுகிறது. இந்தப் பற்றுக்குறை ரிசர்வ் நிதியிலிருந்து ஈடு செய்யப்படும் என்றும், இதற்காகப் புதுவரி எதுவும் போடப் போவதில்லையென்றும், அடுத்த அக்டோபர் மாசத்திலிருந்து பூரண மதுவிலக்கு அமுலுக்கு வருமென்றும் நிதி மந்திரி தமது வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் பொழுது குறிப்பிட்டுள்ளார்.

## குறிப்புகள்

12-ம் பக்கத் தொடர்ச்சி

கடந்த ஆறு ஆண்டுகளிலே சென்னை நகரின் ஜனத்தொகை 4 இலட்சம் அதிகமாகிவிட்டிருக்கிறது. யுத்தகாலத்தில் வேலை தேடிக் கொண்டுவந்துசேர்ந்தவர்கள், பர்மா, மலாயா ஆகிய இடங்களிலிருந்து யுத்தகாலத்தில் வந்துவிட்டவர்கள், வாழ்க்கைவசதி, கல்வி வசதி, சென்னையிலே, பற்ற இடங்களில் கிடைக்கக்கூடியதைவிட அதிகமாகக் கிடைக்குமென்று சென்னைவந்துகுடி ஏறினவர்கள், ஆகிய இந்தக்காரணங்களால், இந்தஜனத்தொகைப்பெருக்கம் ஏற்பட்டுவிட்டது என்று, மந்திரி டாக்டர் சுப்பராயன், சட்டசபையிலே கேள்விக்குப் பதில்கூறும் முறையிலே பேசினார், ஜனவரி இறுதியில.

*　*　*

சிலோன், விடுதலைவிழா கொண்டாடிற்று. சென்னை அமைச்சர்கள், டாக்டர் சுப்பராயன், கோபாலரெட்டியார் ஆகியோரும், பாகிஸ்தான் அமைச்சர், அப்துர் நிஷ்டாரும், விழாவில் கலந்துகொண்டனர். சிலோன்நாட்டு சிங்கக்கொடி பறக்கவிடப்பட்டு, உற்சாகமான ஊர்வலம் நடந்தேறியது. பலதலைவர்களின் நல்லுரைகள் கிடைத்தன. சிலோன் பிரதமமந்திரி, கனம் சேனநாயகா, மேற்படி விழாவின் முக்கியத்துவத்தை விளக்கிப்பேசியதுடன், நலலுரை கூறினவர்களுக்கு நன்றிதெரிவித்தார்.

*　*　*

ஜுனகாத்சமஸ்தானத்தில்பொது ஜன ஓட்' எடுத்தனர். பெருவாரியானவர்கள் "இந்திய யூனியனில்" சேருவதற்கு 'ஓட்' அளித்துவிட்டனர்.

*　*　*

காந்தியாரின் சிறந்தசேவைகளைப் பாராட்டியும், அவர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும். பாகிஸ்தான் சட்டசபையில்பிப்ரவரி 23-ந்தேதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

*　*　*

### பம்பாய்க்கு மத்தியசர்க்கார் பண உதவி

பம்பாய் மாகாணத்தில் பால் சப்ளையை அதிகப்படுத்துவதற்கான திட்டமொன்றுக்கு ஆகும் செலவில பாதியை ஏற்றுக்கொள்ளும் வகையில் இந்திய சர்க்கார் பம்பாய்க்கு சுமார் 21 லட்ச ரூபாய் மானியம் அளித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பம்பாய் சர்க்கார் 1947—48-ம் ஆண்டில் இறக்குமதியான பால் சத்துக்களை மிகக் குறைந்த விலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஏராளமாக வினியோகித்திருக்கின்றனர்.

பால்காரர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றைப் பம்பாய் சர்க்கார் ஏற்படுத்தியிருப்பதாகவும், இச்சங்கங்களில் மொத்தம் 17,000 கறவை மாடுகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இந்தக்கூட்டுறவு சங்கங்களும் பால்காரர் மற்ற சங்கங்களும் சர்க்கார் பால் விநியோகத் திட்டத்துக்குப் பால் சப்ளைசெய்து வருகின்றன. மாகாணத்துக்குத் தேவைப்படும் பருத்திக்கொட்டையில் சுமார் மூன்றிலொரு பகுதியே அங்கு உற்பத்தியாவதால், பம்பாய் சர்க்கார் இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைத் தீவனங்களைக் குறைந்த விலையில் விநியோகம் செய்து வருகின்றனர். பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவைப்படுவதொருபுறமிருக்க, தற்போதைய உற்பத்தி குறையாமல் பார்த்துக் கொள்வதற்கே கால்நடைத் தீவனம் ஏராளமாகத் தேவையாயிருக்கிறது.

### குழந்தைகள் விரும்பும் சினிமா படங்கள்

குழந்தைகள் எவ்விதமான சினிமாப் படங்களை அதிகம் விரும்புகின்றனரென்பதை அறிவதற்காகச் சமீபத்தில் பிரிட்டனிலுள்ள சகல சினிமாப் படமுதலாளிகளும் ஏழு முதல் 15 வயதிற்குட்பட்ட சுமார் 50000 குழந்தைகளுக்குச் சில வினாக்களை அனுப்பி விடைகள் தரும்படி கேட்டுக் கொண்டனர். இவ்வினாக்களுக்குக் குழந்தைகள் அனுப்பியுள்ள பதில்களைக்கண்டு சினிமா முதலாளிகள் பெரிதும் ஆச்சரியப்படுகின்றனர்.

சாதாரணமாகக் குழந்தைகள் சண்டைகள் 'ஸ்டண்ட்' படங்களையே விரும்புவார்களென சினிமா முதலாளிகள் எதிர்ப்பார்த்தனர். ஆனால் இக்குழந்தைகளின் விடைகளில் 'ஸ்டண்ட' படங்களுக்குக் கடைசி ஸ்தானமே அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாறாகச் சரித்திரசம்பந்தப்பட்ட படங்கள் முதல் ஸ்தானம் வகிக்கின்றன.

ஆண், பெண் இருபாலரும் மிருகங்களைப் பற்றிய (வனக் காட்சிகள் நிறைந்த) சினிமாப் படங்களை விரும்புவதாக அறிவித்துள்ளனர். காதல் கட்டங்கள் நிறைந்த படங்களைப் பார்ப்பதில் ஆண்களில் 19 சத விகிதத்தினரும், பெண்களில் 66 சத விகிதத்தினரும் ஆவல் தெரிவித்துள்ளனர். ஆண்களில் 43 சத விகிதத்தினரும் பெண்களில் 51 சத விகிதத்தினரும் விபத்துகள் கொலை முதலியவைகளில் முடியும் படங்களை விரும்பவில்லை. உலகச் செய்திப் படங்களைப் பொறுத்த வரையில் பெண்களை விட ஆண்களே அதிகம் விரும்புகின்றனர்.

"நல்ல அம்சங்களுடன் கூடிய குழந்தைகளுக்கான படங்களையே நாங்கள் அதிகம் பார்க்க விரும்புகிறோம்" எனச் சகல குழந்தைகளும் பொதுவாகப் பதில்அளித்துள்ளனர்.

### உலகிலேயே மிகப்பெரிய கதவு

உலகத்திலேயே மிகப் பெரிய விமானமான பிரிஸடல்—167 என்ற ஆகாய விமானத்தை நிறுத்தி வைப்பதற்கான கொட்டகைக்குப் பொருத்தமாகச் செய்யப்பட்டுள்ள கதவு உலகிலேயே மிக மிகப் பெரியதாகும். இதன் நீளம் 1045 அடி, உயரம் 65 அடி 9 அங்குலம். சுலபமாக மூடுவதற்கும் திறப்பதற்கும் வேண்டி இக்கதவு அலுமினியம் கலந்த ஒரு வித உலோகத்தினால் செய்யப்பட்டுள்ளது. சாதாரணமாக நாடக மேடைகளிலுள்ள திரைகள் எவ்விதம் இருபுறங்களிலும் திறந்து கொள்கிறதோ அதுபோல் இக்கதவும் திறந்து கொள்கிறது. இக்கதவில் பொருத்தப்பட்டுள்ள சிலகருவிகளின் மூலம் இதை இரண்டே நிமிடத்தில் மூடவோ அல்லது திறக்கவோ முடியும்.

### செயற்கை சந்திர ஒளி

இரவு நேரங்களிலும் மூடு பனிக் காலங்களிலும் ரயில்வே ஷெட்டுகளில் வாகனங்களை ஒரு இருப்புப் பாதையிலிருந்து மற்றொரு பாதைக்கு மாற்றுவதென்பது இனி அபாயகரமானவேலையில்லை. போதிய வெளிச்சமின்மையும் ஷெட்டுகளின் நிழல்களும் விபத்துகளுக்குக் கார

(11-ம் பக்கம் பார்க்க)

## என் வாழ்வு

4-ம் பக்கத் தொடர்ச்சி

விமலா? அதிலும் நம்மைப்பற்றி யார் கேட்கப் போகிறார்கள் என்ற திமிர்" என்று மரகதம் கூறினாள். டாக்டர், அண்ணனைத் தங்கை தூற்றுவதோடு நிற்காமல் கண்களைப் பிசைந்து கொள்வதைக்கண்டு, "ஏனம்மா போனதை எண்ணிப் புலம்பலாமா. அதெல்லாம் ஆண்டவன்செயல்" என்றார். விமலா, ஆண்டவன் உங்களை டாக்டராகவும், என்னை இப்படியும், அக்காவை இப்படியும் கண்ணுசாமியை அப்படியுமாக எத்தனை கோலத்தில் வைத்திருக்கிறார் பாருங்களேன். அவர், உலகம் எப்படிப் போனால் என்ன என்று எண்ணுகிறாரே தவிர, இவ்வளவு அலங்கோலமாக இருக்கிறதே நமது படைப்பு என்று கவலை பிறக்கிறதா. எப்படிப் பிறக்கும்? சிவனாக இருந்தால் பக்கத்தில் ஒன்று, தலையில் ஒன்று. விஷ்ணு மார்பின்மீதே சாய்த்துக் கொண்டிருக்கிறாராம். பிரம்மா என்னமோ நாக்கிலே வைத்துக் கொண்டிருக்கிறாராம். இப்படி நமது "சாமிகள்" நாயகிகளுடன் ஜோராகக் காலந்தள்ளிக் கொண்டிருக்கையிலே, நம்மைப் பற்றி ஏன் கவலை வரப்போகிறது. உங்களைப் போன்றவர்களைக், கடவுள் உல்லாசமாக இருக்கிறபோது படைத்திருப்பார். என்னைப் போன்றவர்களை அவர் உடலோ, உள்ளமோ இரண்டுமே எரிச்சலாக இருக்கும்போதோ பிறப்பித்திருப்பார்" என்றாள். டாக்டர் சிரித்துவிட்டு, "ஏதேது விமலா, உனக்கு கடவுள் பக்திகூடக் கிடையாது போல் தெரிகிறதே" என்றார். "நீங்கள் என்ன சார் கடவுளுக்கு வக்கீலா!" என்று பளிச்செனப் பதிலளித்தாள் விமலா. "சரி, போதும் வாயை மூடு விமலா! ஏதேதோ வேதாந்தமும் விதண்டாவாதமும் பேசிக்கொண்டே வந்தவரைக் காக்கவைக்கிறாய். மேலே அழைத்துக்கொண்டு போய் உட்கார வை. விசிறி கொடு. நீயேதான் கொஞ்சநேரம் விசிறிக்கொண்டு இரேன். நான் காப்பி எடுத்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறினாள் மரகதம். டாக்டரை அழைத்துக்கொண்டு விமலா, மாடிக்குச் சென்றாள். டாக்டர் அதுவரை தாசி வீட்டுக்கு, மருந்து கொடுக்கக் கூடச் சென்றதில்லை. அதுதான் முதல் தடவை. தாசிகள், வருகிறவர்களை மயக்க, படுக்கை அறையை அலங்கரித்திருப்பார்கள், உள்ளே நுழைந்த உடனே பரிமளம் மூக்கைத் துளைக்கும், பஞ்சணை கண்ணைக் கவரும், ரவிவர்மா படங்களும், பாரிஸ் லேடி போட்டோக்களும் சுவரில் இருக்கும், என்று கதைகளில் படித்ததுண்டு, கண்டதாகத், தோழர்கள் சொல்லக் கேட்டதுண்டு. தாசிகள் இவ்விதம் சொகுசாக அறையைச்சிங்காரித்து வைத்துக் கொண்டிருப்பதால்தான் இளம் வாலிபர்கள் சொக்கி விடுகிறார்கள் என்று அவனுடைய நண்பர்கள்கூறியதைக் கேட்டு இருக்கிறான். அவ்விதமான அலங்கார அறைக்குள்தான் செல்லப்போவதாக எண்ணிய சுந்தரேசனுக்கு விமலாவின்படுக்கைஅறை, பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. வேசி வீசும் வலை என்று அவனிடம் வர்ணிக்கப்பட்ட அறை, வறுமையின் வாடை வீசும் கொட்டிலாக இருந்தது. பத்து வருஷங்களுக்கு முன்பு புதிதாக இருந்த கட்டில். அதன் மீது கோரைப்பாய். சுவரிலே பல துளைகள். ஓரிடத்தில் லட்சுமி படம். மற்றோரிடத்தில் சரஸ்வதி. மற்றும் ஓர் இடத்தில் காலண்டர். சோப்பு பெட்டியின் மூடி ஒருபுறமும், அடிக்கட்டு வேறுமாக அறையின் மத்தியில் சிதறிக் கிடந்தது. கிழிந்த புடவைகள் ஆணியில் தொங்கின. இரவிக்கைகள் கீழே கிடந்தன. சுவரோரமாக இரண்டொரு பீடித்துண்டுகளும் தீக்குச்சித் துண்டுகளும் கிடந்தன. கட்டிலின் மீது கிடந்த பாயை அகற்றினாள் விமலா. மெத்தை ஒன்று தெரிந்தது. இரண்டொரு தலையணையும் கிடந்தன. "உட்காருங்கள், 'சூட்' அழுக்காகிவிட்டால், வெளுக்க வண்ணான் இருக்கிறான். சோபாவிலும் நாற்காலியிலுமே உட்கார வேண்டுமா? இந்த மாதிரி சொகுசான கட்டில் எங்கிருந்து உங்களுக்குக் கிடைக்கப் போகிறது" என்று தன் வறுமையை விமலா தானே கூறிக்கொண்டாள். அது டாக்டருக்கு வருத்தமாக இருந்தது அவன் வாட்டப்படவில்லை. "இந்த அறை, கீழே சமையலறை இதற்கு வாடகை 10 ரூபாய். மரகதம் வாய் வாழைப்பழந்தான். கை கருணைக்கிழங்கு. இந்த வீட்டில் நாலொரு குடி, மற்றும் மூன்று குடித்தனம், மொத்தத்தில் 50 ரூபாய் வாடகை வருகிறது. வேறொரு வீடும் இருக்கிறது. அதிலே 60 ரூபாய் வருகிறது. இவ்வளவும் ஐந்து வருஷத்திலே சம்பாதித்தாள். மகா ஜாலக்காரி" என்று விமலா, மரகதத்தின் தகவலைக் கூறத் தொடங்கினாள். அதற்குள் காலடிச் சத்தம் கேட்டது. டாக்டர் திடுக்கிட்டு எழுந்தார். பழக்கமற்றவரல்லவா? அதனால் யார் வருகிறார்களோ என்றபயம். விமலா, கையால் "உட்காருங்கள்" என்றுஜாடை காட்டினாள். பிறகு உற்றுக் கேட்டுவிட்டு, 'யாருமில்லை அக்காவாகத்தான் இருக்கும்" என்றாள். 'அது எப்படி உனக்குத் தெரிந்துவிட்டது' என்று டாக்டர் கேட்டார். 'உங்களுக்கு எப்படி ஏதோ குழலை மார்பிலே வைத்ததும் இன்ன நோய் என்று தெரிந்து விடுகிறது. அது உங்கள் வித்தை. இது என்னுடையது' என்று விமலா கூறினாள்.

(தொடரும்)

## குடியிருப்பு

14-ம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு தட்டும் ஐந்துபேர்கள் கொண்ட குடும்பம் வசிக்க வசதியுடையதாயிருக்கும்.

கட்டடத்தின் அமைப்பு தற்கால நாகரிகத்திற்கேற்றபோல் கட்டுவதுடன் காற்று ஓட்டவசதியும், ஒவ்வொரு தட்டிற்கும் தனித்தனிமேல் வீடு அமைக்கப்படும்.

வாழ்க்கை வசதிக்கானவைகளும் பெரியசமையல் அறையும், அடுப்புகளும், கையலம்பும் பேசின்களும், குப்பைத்தொட்டிகளும் ஆறு குளிக்கும் அறைகளும் ஆறு பழயசாமான்போடும் அறைகளும் அமைக்கப்படும்.

கடைகள் 21 அடி அகலத்தில் 50 அடி நீளத்திலிருக்கும். குழந்தைகள் விளையாடுவதற்கெனப் பின்புறம் 840 சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பு விடப்பட்டுள்ளது.

## தில்லை இளங்கோ மன்றப் பாரதிதாசன் பாட்டுப் போட்டி.

சிதம்பரம் இளங்கோ மன்றத்தின் சார்பில் 22—2—48 ல் நடைபெற இருந்த பாரதிதாசன் பாட்டுப் போட்டி, பெரும்பாலான வெளியூர்த் தோழர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பதற்காக 7-3-48-க்கு ஒத்திவைக்கப் பெற்றுள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# குடியிருப்போர் மாநாடு

—●—

சென்னை, கிரவுன் டாகீசில், தோழர் T. செங்கல்வராயன், தலைமையில், இரண்டாவது சர்க்கிள் குடிஇருப்போர் மாநாடு, 14-2-48 காலையில் நடைபெற்றது. தோழர் ராமதாஸ், மாநாட்டினரை வரவேற்றுப் பேசினார். தோழர் கன்னியப்பன் M. L. A., கொடி ஏற்றினார். தோழர்கள் காமராஜ், ஜீவானந்தம், அண்ணாதுரை, ஆகியோர், குடியிருக்கும் வசதியின்றி உள்ளவர்களுக்குள்ள குறைபாடுகளைப் போக்குவதுபற்றிச் சொற்பொழிவாற்றினர். சென்னை நகரில், வாடகை வீடுகளில் குடியிருந்துகொண்டு பலவிதமான இன்னல்களுக்கு ஆளாகும் கஷ்டத்தைப் பற்றியும், சர்க்காரும், சென்னைக் கார்ப்பரேஷனும், புதிய வீடுகள் அமைத்து, ஏழைகளுக்கும், நடுத்தர வகுப்பினருக்கும் வசதி செய்துதர வேண்டியதுபற்றியும் பேசப்பட்டதுடன், உடனடியாகச் செய்யப்பட வேண்டிய சட்ட. சௌகரியங்கள் சம்பந்தமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னையிலே, குடி இருக்கும் மக்களின் தொகை வளர்ந்துவிட்டது—வளர்ந்துகொண்டே இருக்கிறது. வீடு தேடுவது, பெரிய பிரச்னையாகிவிட்டது-சர்க்கார், வாடகைக் கட்டுப்பாட்டு அலுவலரை அமைக்கும் அளவுக்கு நிலைமை போய்விட்டது. சென்னையிலே உள்ள இடநெருக்கடியைத் தீர்க்க, பலப்பல யோசனைகள் கூறப்படுகின்றன. நடுத்தர வகுப்பினருக்குச் சங்கடம். அதைவிடமிக அதிகமான அளவு சங்கடம், ஏழைப் பாட்டாளிகளுக்கு. குருவிக் கூடுகள் போன்ற அளவுள்ள வீடுகள்—அளவில் அவ்விதம். நிலைமையைக் கவனித்தாலோ, குதிரைக் கொட்டிலைப் போன்றது, அவ்வளவு அநாகரிகம், அசுத்தம், காற்று நுழையமுடியாது. வெளிச்சம் உள்ளே வருவதில்லை. மழை காலத்திலே, அந்த வீடுகளெல்லாம், ஓடங்களாகிவிடும். குப்பை குவிந்தபடி இருக்கும். இப்படிப்பட்ட நிலையிலுள்ள மக்கள், பல இலட்சம். கொத்துநோய் ஏற்பட்டால், பல ஆயிரம் மக்களைக் 'காவு' கேட்கிறது — இப்படிப்பட்ட சாவுக் கிடங்குகளைத்தான், ஏழைகள் பெற முடிகிறது.

நாகரிக வாழ்க்கையை மக்களுக்குத் தருவதே நல்லாட்சியின் கடமை. எனவே, அனைவருக்கும் இருக்க இடம் அமைத்துத் தரும் காரியத்தைச் சர்க்கார் மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பிரச்னையைக் கவனிக்கத் தொடங்கியது இதுவே முதல் தடவை. இனி இதுபற்றி, உருவான நடைமுறைக்கு ஏற்ற திட்டங்கள் தீட்டப்பட்டுச் சர்க்காருக்கு அனுப்பப்படவேண்டும். வாடகைக்கு வீடுகளை, தனிப்பட்டவர்கள் கட்டுவதும், பிறகு, அவர்கள், அதிக வாடகை கேட்கிறார்கள், பலவிதமான இன்னல்களை உண்டாக்குகிறார்கள், அவர்களின் போக்கைக் கட்டுப்படுத்த வேண்டும், அவர்களுக்குக் கார்ப்பரேஷன் அதிக வரி போடவேண்டும், என்றெல்லாம் பேசப்படுவதைவிட, சர்க்கார், காலி இடங்களில், தற்கால சுகாதார முறைக்கு ஏற்றபடி, வீடுகளை அமைத்துத் தரவேண்டும் — வாடகைக்கோ—அல்லது நீண்ட நாள் தவணையின் பேரில், தீர்க்கப்படக் கூடிய கடன் பத்திரத்துக்கு, வீடுகளை விற்பனை செய்யும் முறையிலேயோ இதற்கான புதுத் திட்டங்களை, இனி இந்தப் பிரச்னையில் அக்கறை கொண்டோர் வகுத்திடுவர் என்று நம்புகிறோம். அவர்களுக்கு உதவியாக இருக்கவேண்டுமென்பதற்காக, சோவியத் ரஷியாவிலும், மலாய்நாட்டுச் சிங்கப்பூர் நகரிலும், வீடுகள் அமைப்பதற்கான திட்டங்கள் போடப்பட்டிருக்கும் தகவலை வெளியிடுகிறோம்.

சோவியத் யூனியனின் யுத்தசேதப் பிரதேசங்களிலும், இடிந்துபோன இடங்களிலும் வசிக்கும் ரஷியாவின் 60,000ம் குடும்பத்தினர்களுக்குப் புதியவீடுகள் கட்டப்பட வேண்டுமென்று சோவியத் சர்க்காரும், கம்யூனிஸ்ட் கட்சியினரும் உள்நாட்டு விவகார இலாகாவுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

யுத்தம் முடிந்த பின்னர் சுமார் 8,00,000 குடியானவர்கட்கும் விவசாயிகட்கும் இந்தப்பிரதேசங்களில் புதியவீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அக்டோபர் மத்தியபாகத்தோடு 4,000,000 குடும்பங்கள் ருஷியாவில் மட்டும் வசிப்பதற்கு 885000 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. உக்ரைனின் பிரதேசத்தில் 2,500,000 குடும்பங்களுக்குப் போதிய 620,000 வீடுகளும், வெள்ளை ருஷியாவில் 1,700,000 குடும்பங்களுக்குப் போதிய 288 000 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

மோல்டாவியாவிலும், லித்துனியாவிலும், எஸ்தோனியாவிலும், ஸ்தலப் பிரதேசங்களில் அநேகம் குடும்பங்கள் திரும்பவும் வீடுகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். சில விவசாயிகள் தாங்களாகவே கட்டிடம் கட்டிக்கொண்டுள்ளனர். ஆனால் பெரும்பாலான வேலைகள் ஸ்தல வேலையாட்களால் பார்க்கப்பட்டுள்ளது.

மாஜி இராணுவ உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களும், அனாதைகளும், யுத்தத்தால் முடமானவர்களும், மற்றப்படியானவர்களும் இனமாக வீடு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளனர்.

## சிங்கையில் கட்ட ஏற்பாடு

சிங்கப்பூர் முன்னேற்ற தர்மகர்த்தா ஸ்தாபனத்தார் 500,000, வெள்ளி செலவில் சிறுசிறு அறைகளுடன் 2 வரிசை வீடுகளைக்கொண்ட கட்டிடம் கட்டும் வேலை அடுத்தவருடம் பிப்ரவரியிலாயினும் அல்லது மார்ச்சு மாதத்திலாயினும், ஆல்பெர்ட் தெருவிலும், செங்பாங்பிளேசிலும் இரண்டு பகுதிக் குடியிருப்புக் கட்டிடம் கட்ட ஆரம்பமாகும். தர்மகர்த்தா ஸ்தாபனத்தால், 1948-ம் வருடம் ஸ்தலப்பிரதேசத்தில் கட்டுவதாகத் திட்டமிடப்பட்டுள்ள இரண்டாவது பகுதிக்கட்டிடம் நான்கு மெத்தைகளைக்கொண்டதாய் 40 அடி உயரத்தில ஆல்பெர்ட் வீதியிலும் செங்பாங் பிளேசிலும் உள்ள 20000 சதுர அடிகளைக்கொண்ட தர்மகர்த்தா நிலத்தில் கட்டப்படும்.

அடுத்த வருடம் கட்டி முடிக்கப்போவதாய் எதிர்பார்க்கப்படும் கட்டிடங்களின் இரண்டு பகுதியிலும், 54 இரண்டு அறைகளின் கட்டுகளையுடையதாய் ஏழைகளுக்குவிட்டு விடப்பட்டதாயும், கீழ்பாகத்தில் 10 கடைகள் உடையதாயுமிருக்கும்.

(13-ம் பக்கம் பார்க்க)

## அந்த ஒருவகை நிலைமை

2-ம் பக்கத் தொடர்ச்சி

மரணத்தில் முடிந்த இப்பாதகச் செயலால், ஒவ்வொருவரும் ஓரளவு பொறுப்பாளியாகவே இருந்திருக்கிறோம்" என்று அபுல்கலாம் அசாத் அவர்கள் கூறுவதை ஊன்றிக் கவனித்தால், இந்த வெறுக்கத்தக்க நிலைமை மாறவும்—மாற்றப்படவும் தனிப்பட்டவர்களால் முடியாதென்பதும், இந்நாட்டிலுள்ள அனைவரும் தத்தம் மனப்பண்பை தாம் தாம் கொண்ட போக்கில் விடாது, ஒரு முகப்படுத்தி ஒற்றுமைப்பட்டாலன்றி, மௌலானா அவர்கள் கூறும், ஒருவகை நிலைமையை மாற்ற முடியாதென்பதும் புலப்படும். இதற்கு வழி என்ன?

காந்தியடிகள், தம் மனக்கண் முன் மதத்தை நிறுத்திப் பார்க்கவில்லை; மக்களையே நிறுத்திப் பார்த்தார்; மக்கள் அனைவரையும் தன் உடன்பிறந்தார் போலக் கண்டார். அவர்களிடையே உள்ள உயர்வு தாழ்வை—பிளவைப் போக்கி ஒற்றுமையை உண்டாக்க உழைத்தார்—உயிர் துறந்தார். இப்போது அவர் இல்லை. ஆனால், அவருடைய உழைப்பின் சக்தி நம் அனைவரிடமும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டு விட்டது. இனி, அவர் விட்டுப் போன வேலையை நாம் தொடர்ந்து செய்யவேண்டும். நம் மனக்கண்முன் மதத்தை மறந்தும் நிறுத்திப் பார்க்கக்கூடாது; மக்களையே நிறுத்திப் பார்த்தல் வேண்டும். மதத்தை மனக்கண்முன் நிறுத்திப் பார்ப்பதைத்தானே, மௌலானா அவர்கள், 'தேசத்திலுள்ள ஒருவகை நிலைமை' என்று குறிப்பிடுகிறார். இந்த 'நிலைமை'தானே ஒப்பற்ற தலைவர் உத்தமரின் உயிரையே குடித்தது!

உலகத்திலேயே எந்த மதத் தலைவர்களாலும், அரசியல் தலைவர்களாலும் செய்யமுடியாத ஒப்பற்ற காரியத்தைக் காந்தியடிகள் செய்து காட்டினார் இதுவரை உலகில் தோன்றிய எந்த மதத் தலைவனும், தன்னுடைய மதத்தைப் போன்றதே பிறருடைய மதமும் என்ற சமரச நோக்கைக் கொள்ளவும் இல்லை—கூறவுமில்லை. ஆனால், காந்தியடிகள் இந்து மதத்தையும், இஸ்லாம் மதத்தையும் சமரசமாகவே கொண்டார். கீதையை உச்சரித்த அவருடைய நாவே குரானையும் உச்சரித்தது. உண்மையான இருதய சுத்தத்துடனேயே இதனை அவர் செய்தார். அவருடைய இந்த இருதய சுத்தமே அவரை உலகம் போற்றும் உத்தமராக்கியது. பரம விரோதிகளும் அவருடைய இருதய சுத்தியில் (Sincerity) மாசு காண முடியாது.

அரசியல் துறையிலும், இதுவரை எந்த அரசியல் தலைவனும் செய்யமுடியாத காரியத்தைக் காந்தியடிகள் செய்து அதில் வெற்றியும் கண்டார். இருநூறு ஆண்டுகளாக நம்மை அடிமைப்படுத்தி ஆண்டுவந்த ஆங்கிலேயரை ஆயுத பலமின்றியே, அறிவின் பலத்தால் வெளியேறும்படி செய்தார் இப்படிப்பட்ட ஒரு உத்தமரைத்தான், இத்தேசத்திலுள்ள ஒருவகை நிலைமை, ஒருவனைச் சிருஷ்டித்துக், கொல்லும்படி செய்துவிட்டது.

இந்தச் சிருஷ்டிப்பு முறையையும், இதற்கு அடிகோலும் அந்த ஒருவகை நிலைமையையும் நாம் அடியோடு ஒழித்துக்கட்டவேண்டும். சுதந்தரம் அடைந்துள்ள நம் நாட்டைக் காப்பாற்றுவதன் பொறுப்பு இதில்தான் அடங்கியுள்ளது. இந்தப் பொறுப்பைக் காந்தியடிகள் உணர்ந்துதான், சுதந்தரம் பெற்றபின், பெற்ற சுதந்தரத்தைப் பாதுகாக்க, மக்களின் ஒற்றுமை — சாதி மதம் அற்ற ஒத்துழைப்பு வேண்டுமென எண்ணினார்—அதற்காகவே பாடுபட்டார்—அதனாலேயே உயிரையும் துறந்தார். இனியும் இத்தகைய கொடுமைகள் நிகழாதபடி நம் நாட்டிலுள்ள அந்த ஒருவகை நிலைமையை மாற்ற நாம் பாடுபடவேண்டும்.

இங்ஙனமன்றி, இனியும் சாதிமத உயர்வு தாழ்வுகளை உண்டாக்கி, மக்களிடையே பிளவு மனப்பான்மையை வளர்க்கும் போக்கில் காரியங்களைச் செய்வோமானால், அந்த ஒருவகை நிலைமை இருந்துகொண்டுதான் இருக்கும். கோட்சேக்களும், முத்தநாதன்களும் அவ்வப்போது சிருஷ்டி செய்யப்பட்டுக்கொண்டுதான் இருப்பர். பெரியபுராண காலத்தில் இருந்த முத்தநாதன், இன்று கோட்சே வடிவத்தில் வந்ததற்குக் காரணம், அன்றுதொட்டு இன்றுவரை அந்த ஒருவகை நிலைமை மாறாமலும்—மாற்றப்படாமலும் இருந்ததுதான் என்பதை உணரும் எவரும் இனியும் அந்த நிலைமை நீடிக்கவேண்டு என்று ஒருநிமிடமும் விரும்பமாட்டார்கள்.

பெரியபுராண காலத்தில் இருந்த மெய்ப்பொருள் நாயனாரை வஞ்சனையால் கொன்ற முத்தநாதன் காலத்திற்குப்பிறகு, எத்தனையோ சீர்திருத்தத் தலைவர்கள் மதத்துறையில் கிளம்பினர்.

அவர்கள் எல்லாரும் தாம் தாம் மேற்கொண்ட மதவரம்பைக் கடவாமல் அதற்குள் நின்றுகொண்டே, மதசீர்திருத்தம் செய்வதாகச் சொல்லிக்கொண்டு, தங்கள் மதத்திற்கு உயர்வு தேட முயன்றனரேயன்றி, காந்தியடிகளைப்போல் சகல மதங்களையும் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு கற்பியாமல், சமமாக நோக்கி, மதங்களின் பெயரால், மக்களிடையே எழுந்து வளர்ந்துள்ள பிளவு மனப்பான்மையைப் போக்க வேண்டுமென்ற பரந்த நோக்கத்தைக்கொள்ளவில்லை.

எனவே, குறிப்பிட்ட ஒரு மதத்தைப் பற்றியோ சாதியைப் பற்றியோ மக்கள் உயர்வாக எண்ணவும், தம் மதமல்லாத பிற மதங்களையும் சாதிகளையும் இழிவாகக் கருதவும், அதனால் மக்களிடையே பிளவு மனப்பான்மையும் பகைமையுணர்ச்சியும் உண்டாக்கிக் கலகமும் கொடுமையும் ஏற்படவுமான நிலைமை இனியும் இந்நாட்டில் தலைகாட்ட விடாமல் பார்த்துக்கொள்வதையே இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தங்களுடைய கடமையாகக்கொள்ள வேண்டும்.

சாதிமதங்கள் எல்லாம் ஒழிந்து மக்களிடையே ஒற்றுமை உண்டாக வேண்டும் என்ற எண்ணம் நாட்டில் பரவிவரும் இந்நாளில், சாதிமத வளர்ப்பு முறைகள் இருப்பதும், சாதிமதங்களால் ஏற்பட்ட கொடுமைகளையும் கொலைகளையும் பார்த்த பின்னரும், நானே உயர்ந்த சாதி—என்னுடைய மதமே சிறந்ததென்று உரத்த குரலில் பேசுவதும், அதனால் சாதிப்பிரிவினைகளும், மதவேறுபாடுகளும் உண்டாக இடமளிப்பதுமான காரியங்கள் இனியும் இந்நாட்டில் இடம் பெறவிடக்கூடாதென்ற பரந்தநோக்கம் ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும் என்பதே எமது கருத்து. அப்போதுதான் அந்த ஒரு வகை நிலைமை நாட்டிலிருந்து மாறும்—மாற்ற முடியும்.

## உலகிலேயே
# மிகப்பெரிய வைரம்

✲

இவ்வருஷம் மேமாதம் லண்டனிலும், பர்மிங்ஹாமிலும் நடைபெற விருக்கும் பிரிட்டிஷ் கைத்தொழில் பொருட்காட்சிக்கு விஜயம் செய்யப் போகும் வெளிநாட்டு வர்த்தகர்களின் கவனத்தைக் கவரக்கூடிய பொருள்களில் உலகத்திலேயே மிகப் பெரியதும் 770-காரட் நிறையுள்ளதுமான வைரமும் ஒன்றாகும். அறுக்கப்படாத இவ்வைரம் மேற்கு ஆப்ரிக்கா வில்ஸிய ரோ லியோன் என்ற இடத்தில் வாயிநதிக்கரையோரத்தில் 1945 ஜனவரி மாதம் அகப்பட்டது.

இதற்குமுன் எடுக்கப்பட்ட வைரக் கற்களில் 310.6 காரட் நிறையுள்ள 'காலினன்' என்ற வைரமும், 995.2 காரட் நிறையுள்ள 'எகட்ஸ்லிபர்' என்ற வைரமுந்தான் உலகத்திலேயே மிகப்பெரியவையெனகூறப் பட்டது. ஆனால் லண்டன் மணற்பிரதேசங்களில கிடைக்கக்கூடியவைரக் கற்களில் வாயிநதி ஓரத்தில கிடைத்துள்ள இவ்வைரம் உலகிலேயேமிகப் பெரியதெனக் கூறால் கூறலாம். இந்த அபூர்வ வைரத்தின் பிரகாசத்தை வேறுபடுத்திக் காட்டுவதற்காக இதற்குமுன் வைரச்சுரங்கங்களிலிருந்தும வண்டல் பிரதேசங்களிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ள பல வகைப்பட்ட வைரக்கற்களும் இத்துடன் வைக்கப்படும்.

எலிஸபெத் இளவரசிக்குத் திருமணத்தின் போது ஓதியிடப்பட்ட வைர நகைகளும், 21-வது ஆண்டு நிறைவை யொட்டி இளவரசிக்கு அளிக்கப்பட்ட பரிசுகளும், தென் ஆப்ரிக்கச் சுற்றுப்பிரயாணத்தின் போது மன்னர் தம்பதிகளுக்கு வழங்கப்பட்ட வெகுமதிகளும் கூட இப்பொருட்காட்சியில் இடம்பெறும். இவைகளுள் மன்னர் தம்பதிகள் தங்கள் புதல்விக்கு விவாஹப் பரிசாக அளித்த தொங்கட்டான்களுடன் கூடிய ஒரு ஜதைவைரக்காப்புகளும் அடங்கும். இவ்வைர நகைகளின் வேலைப்பாடுகள் பலராலும் புகழப்பட்டவை.

வைரம் அறுக்கும் தொழிற்சாலையின் அலுவல்களைப்பற்றி வெளி நாட்டு வர்த்தகர்கள் அறிந்துகொள்வதற்காக இப்பொருட்காட்சியில் ஒரு 'மாதிரி' தொழிற்சாலையும் அமைக்கப்பட விருக்கிறது. வைரம் அறுப்பவர்களின் கைத்திறமையை வர்த்தகர்கள் இங்கு நேரடியாகப் பார்க்க முடியும்.

இப்பொருட்காட்சியில் வைர ஆபரணங்கள்பிரிவுக்கு 31000 சதுர அடி ஸ்தலம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதைவிட இரண்டு மடங்கு அதிகமான ஸ்தலத்திற்கு வர்த்தக ஸ்தாபனங்கள் மனுக்கள் அனுப்பியுள்ளன.

★

## தென் துருவ ஆராய்ச்சியில் மகோன்னத வெற்றி

தென்துருவப் பிரதேச ஆராய்ச்சிகளின் சரித்திரத்திலேயே மகோன்னதமானவெற்றியெனப் பல நிபுணர்களாலும் வர்ணிக்கப்படும் அரும் பெருங் காரியமொன்றைப்பிரிட்டனிலிருந்து சென்றுள்ள நான்கு ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் சாதித்துள்ளனர். பூகோளப் படத்தில் இதுவரை குறிக்கப்படாததும் சிரகாம லாந்திற்கருகேயுள்ளதுமான பனிப்பாறைகளால் மூடப்பட்ட பிரதேசத்தில் சுமார் 80 மைல் தூரத்திற்கு நாய்களால் இழுக்கப்படும் சக்கரங்களில்லாத வண்டிகளின் மூலம் இந்நால்வரும் சென்று திரும்பியுள்ளனர்.

இந்நால்வரும் பால்க்லாந்து தீவுகளின் கிழக்கு சர்வே கோஷ்டியின் அங்கத்தினர்களேயாவர். சிரகாம் லாந்தின் கிழக்குக் கடற்கரையைப் பற்றி 1928 ஆண்டு விமான மூலம் நடைபெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து மிகக் குறைவான குறிப்புக்களே கிடைத்தன. ஆகவே கிழக்குக் கடற்கரையைப்பற்றிய பூகோள படம் தயாரிப்பதற்கான குறிப்புக்களைச் சேகரிக்கும்படியும், 8000 அடி உயரமுள்ள பீடபூமியைக் குறுக்கே கடந்து மேற்குக்கடற்கரையிலுள்ள பிரிட்டிஷ் தளத்திற்கு வரும்படியும் இவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இந்த அபாயகரமான பிரயாணத்தின் மூலமாகத்தான் பூமி எங்கு முடிவடைகிறது; சமுத்திரம் எங்கிருந்து ஆரம்பமாகிறதென்பதைத் திட்டவட்டமாகக் கண்டுபிடிக்க முடிந்தது. பிரயாண ஆரம்பத்தில் இவர்கள் எடுத்துக்கொண்ட உணவையே திரும்பி வரும்வரை நம்ப வேண்டியிருந்தது.

ஒரு நபருக்கு 26 அவுன்ஸ் நிறையுள்ள உணவும், நாய் ஒன்றுக்கு ஒரு ராத்தல் நிறையுள்ள மாமிசமும் ஒருநாள் உணவாகக் கணக்கிடப்பட்டது.

இக்கோஷ்டியார் மேற்கொண்ட பிரயாணம் வெற்றிகரமாகவே நிறைவேறியுள்ளதெனக், கலோனியல் இலாகா நிபுணர்கள் கூறுகின்றனர். ஆகவே இப்பிரயாணத்தின் விளைவாக உலக பூகோள சாஸ்திரத்திற்குப் பிரிட்டன் சிறந்த தொண்டு ஆற்ற முடிந்துள்ளது.

★

## உங்களுக்குத் தெரியுமா?

பிரிட்டனில் பிரதிதினமும் சுமார் 26,000,000 பத்திரிகைப் பிரதிகள் அச்சிடப்படுகின்றன.

* * *

தற்போது பிரிட்டனிலுள்ள நெசவாலைகளில் வாரமொன்றுக்குச் சராசரி 43,000,000 கஜ துணி வீதம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

* * *

1947 ஆண்டு பிரிட்டனில் பிறந்துள்ள குழந்தைகளின் எண்ணிக்கை கடந்த பல வருடங்களைவிட அதிகமானது.

### பிறப்பு.

தோழர் D. V. நாராயணசாமி அவர்களின் துணைவியார் பாப்பம்மாளுக்கு 2—2—48 திங்கட்கிழமையன்று, ஆண்மகவு பிறந்துள்ளது. தாயும் சேயும் நலமே இருக்கின்றனர்.

### வாழ்க்கை ஒப்பந்தம்.

திருச்சி (துறையூர்) 1—2—48 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருச்சி வழக்கறிஞர் தி. பொ. வேதாசலம் அவர்கள் தலைமையில் கோதண்டராமன்—கமலாதேவி வாழ்க்கை ஒப்பந்தம் பாரதி தியேட்டரில் நடைபெற்றது.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi Street. Conjeeveram.